# சிறுவர் அரங்கம்

குழந்தைகளின் திறனுக்கான ஒரு தளம்

இதழ் : 2

2014



## சமூக மாற்றத்திற்கான கருவி

அன்மருதை குழந்தைகள் பாராளுமன்றம்




நீலகிரி மாவட்ட குழந்தைகள் பாராளுமன்றம்



## அன்னையின் வாழ்த்து



**அருட்சகோதரி சூசை மக்னிபிகாத்**
சென்னை மாநிலத் தலைவி
சலேசிய சகோதரிகள்

அன்பான குழந்தைகளே!

'சிறுவர் அரங்கம்' 2-வது மலரின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

இந்த மலரானது, நாம் நடத்திவரும் மாலை நேரப் பள்ளி மற்றும் குழந்தைகள் பாராளுமன்றங்களின் செயல்பாடுகளை விவரிக்கும் ஒரு வரலாற்றுப் பெட்டகமாக உள்ளது.

குழந்தைகள் பாராளுமன்றங்களின் மூலமாக, குழந்தைப் பருவத்திலேயே நீங்கள் அமைச்சர்களாகி, சமூக அக்கறையோடு உங்களுக்கான உரிமைகளைப் பெற அரசு அதிகாரிகளையும் ஆன்றோர்களையும் சந்தித்து, ஜனநாயக ரீதியில் உங்களுக்கான தேவைகளைப் போராடிப் பெற்றிருப்பது என்பது உங்களின் சிறந்த எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது. இத்தகைய வெற்றிக் கதைகள் இன்னும் ஆயிரம் பல்லாயிரமாய் பெருக வேண்டுமென விரும்புகிறேன்; உங்களை மனமார வாழ்த்துகிறேன்.

குழந்தைகளே! இந்த மலரில் பக்கத்துக்குப் பக்கம் உங்களின் படைப்பாற்றல் மிளிர்வதைக் கண்டு உண்மையிலேயே தாயுள்ளத்தோடு பாராட்டுகிறேன். உங்களுக்குள் ஒளிந்திருந்த தனித்திறமைகளை கண்டறிந்து, தூண்டிவிட்டு ஒளிரச் செய்து, அவற்றை மற்றவர்களும் பயன்பெறும் வகையில் நமது 'சிறுவர் அரங்கம்' மூலமாக அரங்கேற்றம் செய்துள்ள இந்த சமூகப் பணி மிகவும் மதிக்கத் தக்கது.

குழந்தைகள் பாராளுமன்ற ஆர்வமிகு செயல்பாடுகளுக்கும், 'சிறுவர் அரங்கம்' 2-வது மலர் சிறப்பாக வெளிவருவதற்கும் ஆதாரமாக விளங்குகிற Auxilium ARUWYE-யின் இயக்குநர் அருட்சகோதரி ஆரோக்கிய மேரி செல்வி அவர்களின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளையும் அவரோடு சேர்ந்து பணியில் ஈடுபட்டிருக்கின்ற அனைவரையும் பாராட்டுகிறேன்.

'சிறுவர் அரங்கம்' மென்மேலும் வளர்ந்து பல்லாயிரம் சிறப்பு மலர்களாக வெளிவர வாழ்த்துகிறேன்.

Sr. Soosai Magnificat

தொடர்புக்கு:
ARUWYE, Mazzarello Convent, United India Colony, 1/2, 3rd Main Road, 5th Cross Street, PB530, Kodambakkam, Chennai - 600 024.
Ph.044-24730815.

## அருட்சகோதரியின் அறிமுகம்



**அருட்சகோதரி. அசாரியஸ் ஆரோக்கிய மேரி செல்வி**
இயக்குநர், ARUWYE

அன்பார்ந்த குழந்தைகளே!

'சிறுவர் அரங்கம்' 2ஆவது மலர் உங்கள் கரங்களில் தவழ்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

குழந்தைகளுக்கான உரிமைகளின் அடிப்படையில், குழந்தைகள் ஒன்றுகூடி தங்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் கலந்து பேசி, அதற்கான தீர்வைக் கண்டு அடைவதற்கான ஓர் அமைப்பாக 'குழந்தைகள் பாராளுமன்றம்' உள்ளது. ARUWYE-யின் மூலமாக தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்று வருகிற குழந்தைகள் பாராளுமன்றங்களில் குழந்தைகளுக்கான பிரச்சினைகளும் தேவைகளும் பேசப்பட்டு, அவற்றிற்கு தீர்வுகளும் காணப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை 'வெற்றிக் கதை'களாக இந்த மலரில் காணலாம்.

குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் பெருகி வருகிற இக்காலச் சூழலில் குழந்தைகள் மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, ஏராளமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். குழந்தைகளிடையே கூட்டு மனப்பான்மை வளரவேண்டும் என வலியுறுத்துகிறோம். 'எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும் மனம் விட்டுப் பேசினால் அதற்கான தீர்வு உண்டு' எனும் உண்மையை உத்திரவாதப்படுத்துகிறோம். நமது பிரச்சினைகளையும், தேவைகளையும் நமக்கான உரிமைகளின் அடிப்படையில் அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ஜனநாயக வழியில் கேட்டுப் பெறலாம் என்கிற ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை வளர்த்தெடுக்கிறோம்.

குழந்தைகளின் தனித் திறமைகளை கண்டறிந்து வளர்த்தெடுக்கும் நோக்கில் ஏராளமான திறன்வளர்ப்பு பயிற்சிகளையும் பயிலரங்குகளையும் நடத்தி வருகிறோம். இதன் விளைச்சலாக கவிதைகள், கதைகள், கட்டுரைகள், ஜோக்குகள், துணுக்குகள் என குழந்தைகளிடமிருந்து வெளிப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை இந்த மலரில் வெளியிட்டுள்ளோம்.

இத்தகைய மகத்தான பணிகளைச் செய்ய எனக்கு உறுதுணையாக இருக்கின்ற சென்னை மாநிலத் தலைவி அருட்சகோதரி குனச மணிபிரகாத் மற்றும் மாநில ஆலோசனைக் குழுவுக்கும் நன்றி. பல்வேறு சமூக முன்னேற்ற பணிகளை தமிழகம் முழுவதும் செய்ய உறுதுணை செய்து கொண்டிருக்கின்ற அனைத்து இயேசு அருட்சகோதரிகளுக்கு நன்றி கூறுகிறேன்.

தாங்கள் செய்கின்ற பணிகளுக்காக உங்களை தொடர்ந்து ஜெபிக்க அழைக்கிறேன்.

Sr. Azarias Arokia Mary Selvi





# இயேசு சோதிக்கப்பட்டார்!

சகோ. ஜோஸ்பின், தெரேஸ்புரம், தூத்துக்குடி

**ஆசிரியை:** ஹலோ குட்டீஸ், எப்படி இருக்கீங்க?

**குட்டீஸ்:** நல்லா இருக்கோம் டீச்சர். நீங்க எப்படி இருக்கீங்க?

**ஆசிரியை:** நானும் நலமே. சரி, நீங்கள் எல்லாம் சாப்டீங்களா?

**குட்டீஸ்:** ஓ... சாப்டோம் டீச்சர்...

**ஆசிரியை:** நான் சொல்றதை இப்போ கவனமா கேட்கணும். நான் ஜீசஸைப் பற்றி சொல்லப் போகிறேன்.

**குட்டீஸ்:** சொல்லுங்க டீச்சர், நாங்க ரெடி...

**ஆசிரியை:** ஜீசஸ் நமக்கு நிறைய நல்ல அறிவுரைகளையெல்லாம் சொல்லித் தந்தார். மூன்று வருசம் மக்களுடனே இருந்தார். 12 சீடர்களைத் தன்னுடன் வைத்துக்கொண்டு அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, அதை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கச் சொன்னார். இப்படி ஜீசஸ் மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதற்கு முன்பு அவர் தன்னைத் தானே தயாரித்துக் கொண்டார். எப்படி தெரியுமா? 40 பகல், 40 இரவு முழுசா தவம். நோன்பு இருந்தார்; கடவுளுடன் பேசினார்; தியானித்தார்; ஜெபம் செய்தார்; கடவுளை ஆராதித்தார்; போற்றினார்; புகழ்ந்தார்; நன்றி சொன்னார். 40 நாள் முடிந்த பிறகு தீய ஆவி - அதாவது சாத்தான் ஜீசஸிடம் வந்து அவரை சோதித்தது. என்ன செய்தது தெரியுமா? ஜீசஸ் 40 நாள் சாப்பிடவில்லை அல்லவா! அவருக்கு ரொம்ப பசிக்கும் என்று சொல்லி, ஒரு கல்லை எடுத்து அவரிடம் கொண்டு போய் கொடுத்து, "இதை அப்பமாக்கி சாப்பிடுங்கள்" என்று சொல்லி சோதித்தது. ஜீசஸ் என்ன சொன்னார் தெரியுமா? **"மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வார்"** (மத்.4:4) என்று சொன்னபோது சாத்தான் ஓடிப் போனது. குட்டீஸ், நமக்கு முதலில் முக்கியமானது எது? கடவுளின் வார்த்தையா? அப்பமா?

**குட்டீஸ்:** கடவுளின் வார்த்தை.

**ஆசிரியை:** வெரி குட். நீங்கள் தினமும் கடவுளின் வார்த்தையைக் கேட்க வேண்டும். ஜீசஸ் 40 நாட்கள் பசியாக இருந்தாலும்கூட கல்லை அப்பமாக்கி சாப்பிடவில்லை. உங்களுக்கு அம்மா நல்ல சாப்பாடு சமைத்துத் தருவார்கள். அதை ஒழுங்காக சாப்பிட வேண்டும். காய்களை எல்லாம் சாப்பிட வேண்டும். ஓட்டலில் பரோட்டா, பாக்கெட்டில் விற்கும் பொறித்த தின்பண்டங்களையெல்லாம் வாங்கி சாப்பிடவே கூடாது. அதுதான் புற்றுநோய் வரக் காரணம். அம்மாகிட்ட "இது வேண்டாம், அது வேண்டும்" என அடம் பிடிக்கக் கூடாது. கடவுள் அம்மா வழியாக உங்களுக்கு நல்ல உணவைத் தருகிறார். அதற்காக கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். தினமும் கடவுளின் வார்த்தையைக் கேட்டு அடிக்கடி அந்த வார்த்தையை திரும்பத் திரும்ப சொன்னால், அது மனப்பாடமாகிவிடும். அப்படி நிறைய பைபிள் வசனங்களை எல்லாம் மனப்பாடம் செய்வீங்களா?

**குட்டீஸ்:** செய்வோம் டீச்சர்.

**ஆசிரியை:** இன்றைக்கு இந்த வசனத்தைச் சொல்லுங்கள். 'மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்' (மத் 4:4) இன்று இந்த வசனத்தை அடிக்கடி சொல்லி மனதில் பதித்துக் கொள்ளுங்கள்.




சங்க காலத்தில் பெண்கள் கல்வி பெற்றிருந்தார்கள் என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது. ஔவையார், பொன்முடியார், காக்கைப்பாடினியார் போன்ற புலவர்கள் அரசர்க்கே நீதி சொன்னதையும் அறியமுடிகிறது.

**பக்தி இலக்கியத்தில் பெண்கள்**

பக்தி இலக்கியம் தோன்றிய காலத்தில் ஆண்டாள், காரைக்கால் அம்மையார் போன்றோர் புலமை பெற்றிருந்ததை படித்தறிய முடிகிறது.

சென்ற நூற்றாண்டில் பெண்களுள் கல்வி கற்றவர்கள் மிகக் குறைவாகவே இருந்தனர். 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு?' என்று கருதும் நிலை அன்று இருந்தது.

**பெண் கல்வி பெறப் பாடுபட்டோர்:**

நாடு விடுதலைப் பெறவேண்டும் என்னும் வேட்கையோடு பெண்களும் கல்வியிலும் பிற வகைகளிலும் முன்னேற வேண்டும் என்னும் கருத்து உருவாயிற்று. பாரதியார், பாரதிதாசன், பெரியார், திரு.வி.க. போன்றோர் பெண்கள் கல்வி பெற வேண்டியதன் அவசியத்தை தங்கள் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்தினர்.

**இக்காலத்தில் பெண் கல்வி**

இந்த நூற்றாண்டில் கல்விச் சாலைகள் பெருகிவிட்டன. பெண்களும் ஆண்களைவிடக் கல்வியில் மேம்பட்டவர்களாக திகழ்கிறார்கள். ஆசிரியப்பணி, அலுவலகப் பணி, மருத்துவப் பணி, பொறியியல் பணி, ஆராய்ச்சி என பல நிலைகளிலும் இன்று பெண்கள் சிறப்புடன் பணியாற்றுகிறார்கள். இன்று பெண் கல்வி மேம்பட்டதே முக்கிய காரணமாகும். இதனால் ஆணும் பெண்ணும் சமம் என்னும் நிலை ஏற்பட்டுள்ளது.

இக்கட்டுரையை எழுதியவர்:
**மு.தனலட்சுமி**, ஐந்தாம் வகுப்பு
இளம்புவனம் குழந்தைகள் பாராளுமன்றம்



# நகைச்சுவை!

- 24 மணி நேரமும் திறந்திருக்கும் கடை எது?
- ★ சாக்கடை.

---

- கத்தும் சோறு போடும்...
- ★ அப்ப எது சார் குழம்பு ஊத்தும்?

---

- சிங்கத்தைப் பார்த்து பயப்படாத விலங்கு எது?
- ★ இன்னொரு சிங்கம்.

---

- உங்க பையன் +2ல் எத்தனை மார்க்?
- ★ 800... சம்திங்.
- அதுவும் சம்திங்தானா?

---

- தாத்தா இனிமேல் கம்ப்யூட்டர் படிச்சாதான் வேலை கிடைக்கும்.
- ★ அப்ப, நீ படிச்சா வேலை கிடைக்காதா?

---

- உடுத்திக் கொள்ள முடியாத 'டிரஸ்' எது?
- ★ அட்ரஸ்.

---

- கப்பல் போவது பெட்ரோலிலா? டீசலிலா?
- ★ கடலில்.

---

- இந்தியாவில் எங்கெல்லாம் பெட்ரோல் கிடைக்கும்?
- ★ எல்லா பெட்ரோல் பங்கிலும் கிடைக்கும்.

---

- ஏண்டா, பக்கத்து பையனை பார்த்து பார்த்து பரிட்சை எழுதற?
- ★ நல்லா பார்த்து பரிட்சை எழுதுன்னு என் அப்பாதான் சொன்னாங்க சார்.

---

- எல்லா பாலையும் பூனை குடிக்கும் வரை என்ன பண்ணிகிட்டிருந்தீங்க?
- ★ இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு பார்த்துகிட்டிருந்தேன்.

---

- நம்ம புது மேனேஜருக்கு கலயா சோப்பு போட முடியாது.
- ★ ஏன்?
- ஏன்னா, அவர் குளிக்கவே மாட்டார்.

---

- கோழி பிடிச்சப்ப கை வெந்திருச்சா. எப்படி?
- ★ அது நெருப்பு கோழியாச்சே.

- கி. மணிகண்டன், வி. நவீன்குமார்)

---

## புதிர்!

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

*1 முதல் 9 வரை எண்களை எடுத்துக் கொள்க. அவற்றை எப்படி கூட்டினாலும் 15 வரவேண்டும். (விடை... 40-ம் பக்கம்)*

● கவிதை



# மழலைகளின் மனதிலிருந்து...

அம்மாவின் கருவில் வாழ்ந்த தினங்களில்
அவளது இதயத் துடிப்பை
இசைப்பாடலாய் கேட்டு இன்புற்றேன்.
வளையல் சப்தம் கேட்டு
கருவில் விளையாடி மகிழ்ந்தேன்
கருவைப் பிரிந்த நான் முதல்
கனவாகவே போனது
என் கடந்த கால சந்தோசங்கள்
ஆனால் இன்றோ...
மகிழ்ந்து விளையாட ஆசைப்படுகிறேன்
அச்சம் என்னை துரத்துகிறது
பள்ளிக்கு நடந்து செல்கையில் கூட
பயம் என்னை உறுத்துகிறது
படுத்துறங்கும் பொழுதும்
பட்டப் பகலில் பயணிக்கும் பொழுதும்
பயத்தின் நிழல் என்னைத் தொடர்கிறது.
காலங்கள் பல கடந்தாலும்
கல்வி அறிவு பெற்றாலும்
குழந்தைகளின் உழைப்பால் வாழும்
குடும்பங்கள் ஏராளம்
சிறகடித்துப் பறக்கும்
சிட்டுக்குருவிகளின் முதுகில்
குழந்தைத் திருமணம் செய்து வைத்து
வாழ்க்கை எனும் பாரங்களை
சுமக்கச்செய்து என் கடமை முடிந்ததென்று
மகிழ்கின்ற சமூகத்தில் வாழும்
நீங்களும் நானும் குழந்தைகளுக்கு
அன்றாடம்
கற்றுத்தர வேண்டியது துணிச்சல் எனும்
தாரக மந்திரம்.
இதோ பாருங்கள் 13 வயது
குழந்தையின் கம்பீரமான வார்த்தைகள்:
உங்கள் உள்ளத்தில் எப்பொழுதும்
துணிச்சல் இருக்கவேண்டும்.
அது எத்தனையோ செயல்களை
செய்யவல்லது.
நீங்கள் தொட்டால் சிணுங்கியாக இருந்தால்
உங்களுடைய வாழ்க்கை குறுகிய
வட்டத்திற்குள்ளாகவே
அமிழ்ந்து விடுகிறது. உங்கள் வாழ்க்கையை
எண்ணிப் பாருங்கள்.
உங்கள் பிறப்பு எப்படி நிகழ்ந்தது?
யாருக்குமே தெரியாது.
ஒருவேளை அது புதுமையாகக்கூட
இருக்கலாம்.
உங்களை அன்பு செய்கின்ற ஒரு குடும்பம்
வசிப்பதற்கென ஒரு வீடு
உண்ண உணவு அனைத்தும் கிடைக்கிறது
அப்படியிருக்க சின்ன விசயங்களுக்காக
நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?
வாழ்க்கை மிக அழகானது.
நீங்கள் அணுகும்போது அது அழகானது.
நீங்கள் 'அதிர்ஷ்டசாலிகள்' என்பதை
உணரும்போது
வாழ்க்கை அழகானதாக மாறுகிறது.
அனைத்திற்கும் மேலாக
உங்களுடைய உடல் தசைகளை முறுக்கி
துணிச்சலோடு வாழ்க்கையை எதிர்கொண்டு,
துன்பங்களையும் பிரச்சனைகளையும் நோக்கி
"ஓடிப்போங்கள்... நான் மகிழ்ச்சியாக
இருக்க விரும்புகிறேன்"
என நீங்கள் சொல்லும்போது வாழ்க்கை
உண்மையிலேயே அழகானதாக மாறுகிறது
என்பதை உங்கள் வாழ்க்கை அனுபவங்களில்
கற்றுக்கொள்ள வாழ்த்துகிறேன்.

- சகோ. ஜூலிந்து சகாயம்

கவிதைகள்



# பொம்மைகளோடு உறங்கும் குழந்தைகள்!

குழந்தை இல்லா
தொட்டில்கள்
கோயில் மரத்தில்.
அன்னை இல்லா
குழந்தைகள்
அநாதை இல்லத்தில்.

அப்பாவிடமும் அம்மாவிடமும்
பள்ளியில் பெற்ற "வெரிகுட்" - ஐ
பலமுறை சொல்லி
ஏதோவொன்று குறைந்தவளாய்
தன் பொம்மைகளிடம்
சொல்ல ஆரம்பித்தாள் அச்சிறுமி
தலையாட்டிக் கொண்டிருந்தன
பொம்மைகள்
அப்பாவாய்...
அம்மாவாய்...

அப்பாவும் அம்மாவும்
தராத அரவணைப்பை
பொம்மைக்கு தந்தபடி
உறங்கிக் கொண்டிருந்தது குழந்தை.

கனவில் தோன்றிய கடவுள்கள்
அச்சிறு குழந்தையின் அரவணைப்பை
வரமாய் கேட்டனர்.

வரிசையில் நின்றிருந்த கடவுள்களுக்கு
உறக்கப் புன்னகையைத் தந்துவிட்டு
பொம்மையை இறுக்கி
அணைத்துக் கொண்டது குழந்தை.

பொம்மையாதலின் வழிமுறைகள்
அறியாமல் விழித்தபடி நின்றனர்
கடவுள்கள்.

**எஸ். ஜெனிபர்,**
எட்டாம் வகுப்பு
பாத்திமா கான்வென்ட், நிர்மலா ஆர்.சி
கோடம்பாக்கம், சென்னை

# விழித்தெழு!

குழந்தைகளே! உங்களது
கூரிய விழிகளைத் திறந்திடு
தூய சிறகுகள் பறந்திடும்.
சாதனை வானம் உன்னைத்
தனிமையில் தவமிருக்கிறது.
விடியலும்
உனக்கொரு விழா எடுக்க
விழித்திருக்கிறது
விரைந்து எழுந்திடு.

**ப.சௌமியா**
எட்டாம் வகுப்பு
போத்தம்பாளையம்

● கட்டுரை



# குழந்தை உரிமை மீறல்களைத் தடுத்தல் மற்றும் பாதுகாப்பு!

**குழந்தைகள் என்பவர் யார்?**

- சாதி, மதம், பால், மொழி, சொத்து, நிறம், பிறப்பு, இனம் போன்ற எவ்வித வேறுபாடுமின்றி 18 வயதிற்குட்பட்ட அனைவரும் குழந்தைகள் ஆவர்.

**குழந்தை உரிமைகள் மீதான ஐ.நா. உடன்படிக்கை**

- குழந்தைகள் தனித்துவம் வாய்ந்தவர்கள் என்பதால் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையை ஐ.நா. சபை 1989 நவம்பர் மாதம் அறிவித்தது.
- 1992 டிசம்பர் மாதம் நம் நாடும் ஐ.நா. உடன்படிக்கையில் கையொப்பமிட்டு குழந்தைகளுக்கு உரிமைகளை வழங்க பொறுப் பேற்றது.
- 54 ஷரத்துகளை உள்ளடக்கிய இந்த உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும் குழந்தை உரிமைகள் அனைத்தும் மனித உரிமைகளாகும்.
- ஐ.நா. உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்ட நாடுகள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை குழந்தை உரிமைகளை நடைமுறைப் படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக் கைகள் குறித்து அறிக்கை வெளியிட வேண்டும். இந்த அறிக்கையின் அடிப் படையில் ஐ.நா. குழு உறுப்பு நாடு களின் குழந்தைகள் நலன், செயல் பாட்டை கண்காணித்து ஐ.நா. பொது சபைக்கு தகவல் அளிக்கும்.

**குழந்தை உரிமைகள்**

- ஐ.நா. உடன்படிக்கையில் கூறப்பட் டுள்ள குழந்தை உரிமைகள் நான்கு வகையாக்கப்பட்டுள்ளது. அவை:

  1. வாழும் உரிமை
  2. வளர்ச்சி உரிமை
  3. பாதுகாப்பு உரிமை
  4. பங்கேற்பு உரிமை

**குழந்தை பாதுகாப்பு என்றால் என்ன?**

- குழந்தைகள் ஆரோக்கியமாக உயிர் வாழ மற்றும் நல்ல உடல், மன வளர்ச்சி பெற்று தனித்தன்மையுடன் வளர குழந்தைகள் பாதுகாக்கப் படுவது குழந்தை பாதுகாப்பு எனப்படும்.

**குழந்தைகளுக்கு பாதுகாப்பு ஏன்?**

குழந்தைகள் இயல்பாகவே

1. வெகுளித்தனமாக
2. உடல் வலிமை இல்லாமல்
3. முழு மன வளர்ச்சியேற்று
4. துன்பங்களுக்கு பலியாகும் பருவத்தில் இருப்பதால் குழந்தை களுக்கு பாதுகாப்பு இன்றியமை யாதது.

**எத்தகைய சூழல்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்க வேண்டும்?**

- வன்முறைகள்
- புறக்கணித்தல்
- தீங்கிழைத்தல்
- சுரண்டல்
- பாரபட்சம்
- துன்புறுத்தல்
- சித்திரவதை செய்தல்
- பாலியல் கொடுமைகள்
- கடத்தல்
- போதை பொருட்களுக்கு அடிமை யாதல்
- நெருக்கடிகால நிலை விளைவுகளி லிருந்து குழந்தைகள் பாதுகாக்கப் பட வேண்டும்.

**பாதுகாப்பற்ற சூழல் நிலவ காரணங்கள்**

- பெற்றோர் கலாச்சாரம்
- மூட நம்பிக்கைகள்
- பிற்போக்கான பழக்க வழக்கங்கள்
- சமூக பாரபட்சங்கள்
- பெரியோர் சுயநலத்திற்கு குழந்தை களைப் பயன்படுத்துதல்

**பெண் குழந்தை பாதுகாப்பு**

- பெண் குழந்தைகளுக்கு எதிராக சமுதா யத்தில் பல பாரபட்சங்கள் நிலவு கின்றன. இவை பெரும்பாலும் சமூக கலாசாரம் என்பதன் அடிப்படையில் நடைபெறு கின்றன.

**குழந்தை பருவ திருமணங்கள்**

காரணங்கள்:

- சமூக பழமைவாதம்
- பெண்ணடிமைத்தன கருத்துகள் மக்களிடம் மேலோங்கியிருத்தல்
- பாதுகாப்பு கருதி குழந்தை பருவத் திலேயே திருமணம் முடித்தல்

**பெண் குழந்தையின் உயிர் வாழும் உரிமை மறுப்பு**

பெண் கருக்கொலை, பெண் சிசுக் கொலை.

காரணங்கள்:

1. ஆண் குழந்தையை அதிகம் விரும்புதல்
2. பெண் குழந்தையை செலவாகும் கணக்கிட்டில் வைத்திருத்தல்
3. வரதட்சணை எனும் கட்டாயம்
4. பெண் குழந்தையை பொறுப்போடு வளர்ப்பதில் தயக்கம்.
5. மூட நம்பிக்கைகள்

**குழந்தை கடத்தல் என்றால் என்ன?**

- குழந்தையின் விருப்பத்திற்கு மாறாக அல்லது குழந்தையின் ஒப்புதல் இன்றி சில நேரங்களில் பெற்றோரின் சம்மதத் துடன் குழந்தைகளை அவர்களின் இயல்பான குடும்ப பின்னணியிலிருந்து பிரித்து, வேறு இடங்களுக்கு ஒரு பொருளைப்போல கொண்டுசெல்வதும், இதன் வாயிலாக பொருளாதார லாபத்தை பெறுவதும் கடத்தல் ஆகும்.

**குழந்தைகளை கடத்துவது எதற்கு?**

- கொத்தடிமையாக்க
- வீட்டு வேலைக்காக
- விவசாய வேலைக்காக
- பாலியல் சுரண்டலுக்காக
- பிச்சையெடுப்பதற்காக
- திருடுவதற்காக
- உடல் உறுப்புகளை விற்க
- போதை பொருள் விற்க, கடத்த
- சர்க்கஸ் போன்ற பொழுதுபோக்கு தொழிலில் ஈடுபடுத்த
- ஏமாற்றி சட்டத்திற்கு புறம்பாக தத்துக் கொடுக்க...

**கடத்தல்காரர்கள் செயல்படும் முறைகள்**

- பார்வைக்கு சந்தேகம் எழாத வகையில் பேருந்து நிலையத்திலோ, இரயில் நிலையத்திலோ குழந்தைகளை அணுகுவது.
- பள்ளியிலோ அல்லது விளையாடும் இடத்திலோ குழந்தையிடம் நட்புடன் பழகுதல்.
- வேலைக்கு ஆள் எடுப்பதாகக் கூறி தினசரி நாளிதழ்களில் விளம்பரம் அளிப்பது.
- திருமண தகவல் நிலையங்களாக செயல் படுவது.

- குடும்பத்தின் நலம் விரும்பிகளாக அவர்களை அணுகுவது
- குடும்ப நண்பர்கள் போல் பழகுதல்
- கடன் தொல்லையிலிருந்து விடுபட குழந்தையை விற்பதற்கு பெற்றோர்களை சம்மதிக்க வைப்பது அல்லது பணத்திற்காக குழந்தையை விற்பது தவறில்லை என சமாதானம் கூறுவது.
- உள்ளூர்வாசிகள் துணையை இதற்காகவே நாடுவது.

### குழந்தைக்கு தீங்கிழைத்தல்

- குழந்தையின் உரிமைகள் வன்முறையால் மீறப்படுதல்
- உடல் உழைப்பு சுரண்டப்படுதல்
- பாலியல் தீங்குகளுக்கு ஆளாக்கப் படுதல் போன்றவை.

### உடல்ரீதியான தீங்குகள்

- அடித்தல், சூடுபோடுதல்
- சித்திரவதைகள்
- பள்ளிக்கூட தண்டனைகள்

போன்ற உடல் பாதிப்பை ஏற்படுத் தக்கூடிய அனைத்து செயல்களையும் கூறலாம்.

### பாலியல் ரீதியான தீங்குகள்

- குழந்தைகளை பாலியல் கண்ணோட் டத்தோடு பார்ப்பது, ஒருவருடைய சுய இன்பத்திற்கு, பாலியல் உறவுக்கு குழந் தைகளை பயன்படுத்துதல், விபச்சா ரத்தில்தள்ளுதல் ஆகியவையும் குழந்தை களுக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமைகள் ஆகும்.

### மனரீதியாக தீங்கிழைத்தல்

- குழந்தைகளை மிரட்டி பேசி பயமுறுத் துதல்
- குழந்தைகளின் மீது இழிவான வார்த்தைகளை உபயோகித்தல்
- மற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டு பேசி தாழ்த்துதல்
- சாதி, மத மற்றும் கலாச்சார கட்டுப்பாடு, பழக்க வழக்கங்களால் விளையும் வார்த்தை பிரயோகங்கள்

போன்றவைகள் குழந்தைகளை மன ரீதியாக பாதிக்கின்றன.

### புறக்கணித்தல்

- அன்பு, பாசம், அரவணைப்பு அளிக் காமல் பெற்றோர்கள் இருப்பது அக்குழந் தையை புறக்கணிக்கப்படுவ தாகும். புறக் கணித்தலும் ஒரு விதமான கொடுமையே.

### குழந்தை சுரண்டல்

- குழந்தை ஈடுபடும் பணிகளில் உழைப்புச் சுரண்டலோ, பாலியல் சுரண்டலோ இருக்குமேயானால் அது கல்வி பயில இடையூறாக அமையுமேயானால், அக்குழந்தை சுரண்டலுக்கு ஆளாகி யுள்ளது.

### சுரண்டல் முறைகள்

- அடமானம் வைத்தல்
- பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல்
- ஆபாசப் படங்கள் எடுக்க பயன் படுத்துதல்
- பிச்சை எடுக்க வைத்தல்
- அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துதல்
- முழு நேர வீட்டு வேலை
- பண்ணை சார்ந்த வேலைகள்
- சிறுதொழில் மற்றும் கைத்தொழில்களில் ஈடுபடுத்துதல்

### பாதுகாப்பற்ற குழந்தைகள் அடையும் பாதிப்புகள்

- குழந்தை பருவம், சுதந்திரம் பறி போகிறது.
- குழந்தையின் தனித்தன்மை அழிக்கப் படுகிறது.
- பணியிடங்களில் வயது வந்த பெரியோரால் தவறாக கையாளப் படுகின்றனர்
- வேலை நிமித்தமாக ஏற்படும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.
- பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகள் பாலியல் நோய்க்கும் மன சிதைவுக்கும் ஆளாகின்றனர்.
- தன்னைப் பற்றிய தாழ்வான கருத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.
- தனிமை நிலைக்கு ஆளாகின்றனர்.
- ஆரோக்கியம், கல்வி, விளையாட்டு நேரம் மறுக்கப்படுகிறது.

### குழந்தைப் பாதுகாப்புச் சட்டங்கள்

- நம் நாட்டில் அரசியலமைப்பு சாசனப்படி குழந்தைகள் பாதுகாப்பு என்பது அடிப்படை உரிமையாகும்.

- சட்டத்தின் முன் அனைவரும் சமம் என அரசியல் சாசனத்தின் 14வது கோட்பாடு கூறுகிறது.
- சாதி, சமயம், இனம், மொழி, மொழி, பால், பிறப்பிடம் போன்ற காரணங்களுக்காக எந்த ஒரு நபரையும் பாகுபடுத்தக்கூடாது என அரசியல் அமைப்பு சாசனத்தின் 15வது கோட்பாடு கூறுகிறது.
- சுரண்டப்படுதல் மற்றும் பொருளாதாரம் காரணமாக நிராதரவாக விடப்படுதலிலிருந்து இளைஞர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என கோட்பாடு 30ன் பிரிவுகள் இ,எஃப் கூறுகின்றன.
- 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் அபாயகரமான எந்தவொரு வேலையிலும் அமர்த்தக்கூடாது என 24வது கோட்பாடு கூறுகிறது.
- அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 24ஏ ன்படி 6 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் அரசு கட்டாய இலவச கல்வியை வழங்க வேண்டும்.
- அரசியலமைப்பு சட்டப் பிரிவு 45ன்படி 6 வயது பூர்த்தியாகும் வரை குழந்தைகளுக்கும் பள்ளி முன் பருவ பாதுகாப்பு மற்றும் கல்வி வழங்க அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

**குழந்தை தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986**

- 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வீடு, கடை, ஓட்டல்கள், தெருவோர உணவகங்கள், உணவு விடுதிகள், சுற்றுலா தலங்கள் மற்றும் எந்த ஒரு துறையிலும் வேலைக்கு அமர்த்துவதை இச்சட்டம் தடை செய்கிறது.

**பாலிய விவாக தடை சட்டம் 1929**

- 18 வயதிற்கு குறைவான வயதுடைய பெண்ணை 18லிருந்து 21 வயது நிரம்பாத ஆண் அல்லது 21 வயதிற்கு மேலான ஆண் திருமணம் செய்தல் குற்றமாகும்.

**விபச்சார கடத்தல் (தடுப்பு) சட்டம் 1956**

- பெண்கள் மற்றும் குழந்தைகள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவதையும் விபச்சாரத் தொழில் புரிய கடத்தப்படுவதையும் இச்சட்டம் தடை செய்கிறது.

**இளைஞர் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) திருத்தப்பட்ட சட்டம் 2006**

- பாதுகாப்பு / பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை பாதுகாத்தல்
- சட்டரீதியாக குற்றமிழைத்துள்ளதாக கருதப்படும் குழந்தைகளுக்கு சட்ட பாதுகாப்பு

**இளைஞர் நீதி சட்ட பிரிவு 23 முதல் 26 வரை கீழ்க்காணும் செயல்கள் குற்றம்**

- குழந்தையை அடித்து துன்புறுத்தல்
- புறக்கணித்தல்
- குழந்தை வேலை / கொத்தடிமையாக வைத்திருத்தல்

**இந்திய குற்றவியல் சட்டம் பிரிவுகள் 312 முதல் 318 வரை கீழ்க்காணும் செயல்கள் குற்றம்**

- பெண் கருவை அழிப்பது
- குழந்தை உயிருடன் பிறக்க தடையாய் இருப்பது
- குழந்தை பிறப்பை மறைத்து உடலை ரகசியமாக புதைப்பது.

**கருவின் நிலைப்பாட்டை கண்டறியும் நுணுக்க முறை (தவறாக பயன்படுவதை கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1994**

- பெண் சிசுவை அழிக்கும் நோக்குடன் கருவில் உள்ள சிசு ஆணா, பெண்ணா என கண்டறிதலை இச்சட்டம் தடுக்கிறது.

அமுலில் இருக்கும் இதர இந்தியச் சட்டங்களையும் சட்ட பிரிவுகளையும் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப் படும் குற்றங்களை தடுக்க பயன் படுத்தலாம்.

**(யுனிசெப் கையேட்டிலிருந்து)**

● கட்டுரைகள்

# குழந்தைகளும் எங்கள் கிராமமும்!



## அத்திப்பாளையம்

க.சங்கீதா
ஒன்பதாம் வகுப்பு,
அத்திப்பாளையம், கோவை

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் கோயமுத்தூர். அதிலிருக்கக்கூடிய ஓர் ஊர்தான் அத்திப்பாளையம். அத்திப்பழம் நிறைந்து காணப்பட்டதால் எங்கள் ஊருக்கு அப்பெயர் வந்தது.

அத்திப்பாளையம்முன்பு குடிசை வீடுகளாகக் காணப்பட்டது. படிப்படியாக வளர்ந்து இப்பொழுது ஓட்டு வீடுகளாகவும், சிலர் மாடி வீடுகள் கட்டியும் வாழ்ந்து வருகின்றனர்.

### கிராமமும் குழந்தைகளும்

எங்கள் கிராமத்தில் ஏராளமான குழந்தைகள் உள்ளனர். பல குழந்தைகள் பள்ளிக்குச் செல்கிறார்கள். சில குழந்தைகளால் பள்ளிக்கு செல்ல இயலவில்லை. அவர்கள் வேலைக்குச் செல்கிறார்கள். காரணம், வறுமையாக இருக்கலாம்; பெற்றோரின் பண ஆசையாக இருக்கலாம். இதனால் குழந்தைகள் எழுத்தறிவைப் பெறத் தவறுவதோடு, வாழ்க்கைக்குத் தேவையான அறிவை அவர்களால் பெற முடிவதில்லை. இதற்கான பொறுப்பு பெற்றோருக்கே உரியது.

சில குடும்பங்களில் தந்தை மதுவுக்கு அடிமையாகி விடுவதால், குழந்தைகள் வேலைக்குச் செல்லும் கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வேலைக்குச் செல்ல வற்புறுத்துவது பெரும்பாலும் வறுமையின் காரணமாகத்தான்.

ஒரு நாட்டின் எதிர்காலம் குழந்தைகளிடம்தான் இருக்கிறது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் இவ்வையம் தழைத்தோங்கும்" என்ற பாரதியின் கனவை நனவாக்குவோம். குழந்தைகளின் வருங்காலம் சிறப்படைய வேண்டுமெனில் அனைத்து குழந்தைகளையும் படிக்க வைக்க முயற்சிகள் எடுப்போம்.

## அசுநல்லிபாளையம்

பி.கௌசல்யா
பத்தாம் வகுப்பு,
அசுநல்லிபாளையம்

எங்கள் கிராமத்தில் அடுக்கு மாடி கட்டிடங்கள் இல்லை. அழகான குடிசைகள் மட்டுமே உள்ளன. குழந்தைகளாகிய நாங்கள் கூடுவோம்,

கொண்டாடுவோம். குற்றால அருவியில் குளிப்பதைப் போல குட்டைகளில் குளிப்போம். வசதியான விளையாட்டு மைதானங்கள் இல்லையென்றாலும், அறுவடை செய்யப்பட்ட விளைநிலங்களில் விளையாடுவோம். வளமான மரங்கள் இல்லை. வளங்களை அழிக்கும் கருவேல மரங்களே உள்ளன. மாலையில் ஆடுகள் மேய்ப்போம். எருமை மேல் அமர்ந்து குதிரை சவாரி செய்வோம். கோழிகளையும், பூனைகளையும் வளர்ப்போம். திருவிழாக்களை மகிழ்ச்சியாக கொண்டாடுவோம். ஊர்வலங்களில் உற்சாகமாக கலந்து கொள்வோம். உரிமையோடு சண்டை போடுவோம். அடுத்த நாள் உறவுகளில் சந்தோசமாய் இருப்போம். இவர்கள்தான் எங்கள் கிராமத்து குழந்தைகள். மகிழ்ச்சிக்கு அளவு இல்லை. உற்சாகத்திற்கு பஞ்சமில்லை.

திருச்சி, [illegible] நகர்
எஸ். [illegible]
ஒன்பதாம் வகுப்பு

'ஓடி விளையாடு பாப்பா
நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா
ஒரு குழந்தையை
வையாதே பாப்பா'

எங்கள் ஊரில் பெரும்பாலான குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். அணைக்க அன்பு அம்மா, அரவணைக்க அன்பு அப்பா, பாசத்தைக் கொட்டிடும் சகோதர சகோதரிகள் என்று அன்பினால் பிணைக்கப்பட்ட குடும்பமாக வாழ்கிறோம். இந்த குடும்பத்தில் வாழும் குழந்தைகளின் பெற்றோர்களின் பாசம், அன்பு, அரவணைப்பு போன்றவற்றால் ஒற்றுமைக்கட்டுப்பட்டு மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள். குழந்தைகளுக்குத் தேவையான கல்வி அறிவு கிடைக்கப் பெற்று, சிறந்த கல்வியாளர்களாக திகழ்வதற்கான வாய்ப்பு உள்ளது. அவர்களுக்கு சிறந்த எதிர்காலமும் அமைந்துக் கொடுக்கப்படுகின்றன.

ஆனால், சில குழந்தைகளின் குடும்ப பின்னணியை நோக்கும்போது குழந்தைகள் அடிமைகளாக்கப்பட்டு, தங்களது சந்தோசத்தை இழந்த நிலையில் அவர்களது வாழ்க்கை சீரழிக்கப்படுகிறது. குறிப்பாக, பெற்றோர்களே தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்புகிறார்கள். தீப்பெட்டி தொழிற்சாலை மற்றும் பல தொழில்களுக்கு அனுப்புகிறார்கள். இதனால் குழந்தைகளின் படிப்பு, மகிழ்ச்சி, திறமைகள் ஆகியவை அழிக்கப்படுகின்றன. குழந்தைகளின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

எனவே, குழந்தைகளை இரு கண்கள் போல பாதுகாத்து அவர்களின் உரிமைகளையும் நிறைவேற்றினால் குழந்தைகளின் எதிர்காலம் ஒளிமயமாக அமையும்.




அழகைப் பற்றி
எழுதச் சொன்னார்கள்
என் கிராமத்தைப் பற்றி
எழுதினேன்.

ஒரு கிராமம் வளரும்போது
அதன் அருமை
நமக்குத் தெரியாது.
அதே கிராமத்திலுள்ள
குழந்தைகள்
வளரும்போதுதான்
அதன் அருமை தெரியும்.

நட்பு என்பது
காட்டில் பூக்கும்
மலர் அல்ல
நம்மைப் போன்ற
குழந்தைகளின்
உள்ளத்தில் பூக்கும்
மலர்கள்.

கோபத்தை மறந்து விடலாம்
ஆசையை மறந்து விடலாம்
ஆனால் நம்
அழகான கிராமங்களை
மறக்க முடியுமா?

பார்க்கின்ற யாரையும்
நேசிக்க முடியாது.
நேசித்த கிராமத்தை
திரும்பவும் பார்க்க முடியாது.

எஸ். அபிநயா
ஒன்பதாம் வகுப்பு



# வெற்றிக் கதைகள்!

### வெற்றிக்கதைகள்: 1

**திருவண்ணாமலை மாவட்டம், ஆவணியாபுரம் மின்னல் ஜோதி குழந்தைகள் பாராளுமன்றம்**

**மின்விளக்கு வசதி :** திருவண்ணாமலை மாவட்டம் ஆவணியாபுரம் மாலை வகுப்பு மையத்தில் மின்வசதி இல்லாமல் இருந்தது. குழந்தைகள் பாராளுமன்றத்தின் மூலம் பணம் வசூல்செய்து, டியூப் லைட் போடப் பட்டது. மேலும் மாலை வகுப்பு அறையில் கரும்பலகை இல்லாததால், நாங்கள் சுவரில் கருப்பு வண்ணம் பூசி எழுதுவதற்கான ஏற்பாடுகள் செய்தோம்.

**சுதந்திரதின விழா :** *15.8.2014* அன்று சுதந்திர தின விழாவைக் கொண்டாடினோம். அதனை எங்கள் குழந்தைகள் பாராளுமன்ற பிரதமர் பொறுப்பேற்று நடத்தினார். ஆவணியாபுரம் ஊராட்சி மன்றத்தலைவர், கவுன்சிலர் மற்றும் அருட்சகோதரிகளை அழைத்து சிறப்பான முறையில் கொண்டாடினோம். தலைவர்களுக்கு சால்வை அணிவித்து சிறப்பித்தோம். குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கினோம். மாலை வகுப்பில் பயிலும் மிகவும் ஏழைக் குழந்தைகளுக்கு நோட்டு, பேனா, பென்சில் அனைத்தும் வாங்கிக் கொடுத்தோம். நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளை நடத்தினோம். எங்கள் செயல்பாடுகளை கண்டு வியந்த ஊராட்சி மன்ற தலைவர் ரூ.200 கொடுத்து எங்களைப் பாராட்டினார்.

### வெற்றிக்கதைகள்: 2

**கோயம்புத்தூர் மாவட்டம், கோவில்பாளையத்தில் மதுபானக்கடை மாற்றம்!**

இன்றைய சமூகத்தில் மிகவும் அச்சத்தக்க கூடிய பிரச்சினையாக உள்ளது மதுபானக் கடைகளாகும். குடிக்கின்ற மக்கள் உடல் ரீதியாக பாதிப்பது மட்டுமன்றி, அந்தப் பகுதி மக்களுக்கே ஒரு பெரிய தலை வலியாக உள்ளது. இந்தப் பிரச்சினை கோயம்பத்தூரில் கோவில்பாளையம் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய கோவில் பாளையம் குழந்தைகள் பாராளுமன்றத்தில் பேசப்பட்டு, அந்தப் பகுதியில் பல பிரச்சினைகளுக்கு அடிப்படையாக உள்ள மதுபானக் கடையை அகற்ற முடிவு செய்யப்பட்டது.

மறுநாள், மதுபானக் கடை முன் கூடி, முற்றுகையிட்டோம். இதை அறிந்த மாவட்ட ஆட்சியர் திரு. முருகானந்தம் விரைந்து வந்து எங்களின் கோரிக்கைகளை கேட்டார். அப்பொழுது, மதுபானக் கடைகளை அகற்றக் கோரிக்கை வைத்தோம். அந்தப் பகுதி மக்களும் போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றும் மற்றும் பக்கத்திலேயே பள்ளி உள்ளதால் குழந்தைகளுக்கு பெரிய தொந்தரவாகவும் இருப்பதாக கூறி, அதை உடனடியாக அப்புறப்படுத்துமாறு கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையை

உடனடியாக ஏற்பதாக மாவட்ட ஆட்சியர் உறுதியளித்தார். அதன்படி, மறுவாரமே மதுபானக் கடையை வேறு இடத்திற்கு மாற்றினார்.

## வெற்றிக்கதைகள்: 3

### விழுப்புரம் மாவட்டம்
### மைக்கேல்புரம் குழந்தைகள் பாராளுமன்றம்!

மைக்கேல்புரம் அக்சீலியம் இல்ல சகோதரிகளால் நடத்தப்படும் குழந்தைகள் பாராளுமன்றம், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம் வட்டம், திருவள்ளூர் ஊராட்சி மன்றத்தில் கல்பனா சாவ்லா குழந்தைகள் பாராளுமன்றம் மைக்கேல்புரத்திலும், அன்னை தெரசா குழந்தைகள் பாராளுமன்றம் பெரியநாயகி நகரிலும், ஜவகர்லால் நேரு குழந்தைகள் பாராளுமன்றம் சவேரியார் பாளையத்திலும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வாரமும் குழந்தைகள் ஒன்றாக கூடி தங்களுடைய தேவைகளையும், பிரச்சினைகளையும் கூடி பேசி, குழந்தைகள் உரிய அதிகாரிகளிடம் சென்று மனு கொடுத்து, பிரச்சினைகளை தீர்க்க வழி வகை செய்கின்றோம். எங்களின் கருத்து நிராகரிக்கப்பட்டால் அதற்கு மேல் உள்ள அதிகாரிகளிடம் சென்று மனு கொடுத்து பிரச்சினைக்கு தீர்வு காண வழிவகை செய்கின்றோம்.

இத்தகைய வாய்ப்பின் மூலம் குழந்தைகள் தங்களைச் சார்ந்த, தங்கள் சுற்றும் சார்ந்த பிரச்சினைகளை கவனிப்பதோடு மட்டுமின்றி, அதை தீர்க்க உரிய நபரை அணுகினால் பிரச்சினைகள் தீரும் என்ற உணர்வையும், தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்கின்றனர். இதன் மூலம் குழந்தைகளின் ஆளுமைத்தன்மை, பிரச்சினைகளை, தேவைகளை பாரமாக கருதாமல் சவாலாக அதை நிவர்த்தி செய்ய இக்குழந்தைகள் பாராளுமன்றம் உதவுகிறது.

**குழந்தைகளின் வளர்ச்சி**

குழந்தைகள் சிந்தித்து, தைரியமாக பேசுகின்ற ஆற்றலையும், தைரியமாக தாங்கள் சொல்ல வேண்டிய சொல்லாற்றலையும், கருத்தையும் வெளிப்படுத்தும் திறனையும் பெற்றுள்ளனர். தங்கள் அன்றாட வாழ்வில் வருகின்ற சிறிய பிரச்சினைகள் அவர்களை அதிகமாக பாதிப்பதில்லை. மனதளவில், அதை சந்திக்கின்ற மனத்திடனை பெறுகின்றனர். (எ.கா.) குடும்பப்பிரச்சினை, சீரியல் பார்த்தல்.

எங்கள் பாராளுமன்ற குழந்தைகள் தொலைக்காட்சியில் சீரியல் பார்ப்பதை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்தது மட்டுமின்றி, அரை மணி நேரம்தான் தொலைக்காட்சியை பார்க்க வேண்டும், மற்ற நேரங்களில் புத்தகம் படிப்பது என்ற தீர்மானத்தை செயல்படுத்தி, நடைமுறைப் படுத்தினார்கள்.

எரியாத மின்விளக்குகளைக் கண்டறிந்து அந்த விளக்குகள் மீண்டும் எரிவதற்கு மனுவை வார்டு உறுப்பினர்களுக்கும், ஊர்த் தலைவருக்கும் கொடுத்து மின் விளக்குகள் எரிய வழிவகை செய்தார்கள்.

பல வருடங்களாக மூடி வைக்கப்பட்டுள்ள நூலகத்தை தொடர் முயற்சியால் மீண்டும் திறப்பதற்கான அனுமதியை பெற்றுள்ளனர்.

**சுற்றுச்சூழல்**

மைக்கேல்புரம் தூய்மையான கிராமம். அதில் குப்பைகளை யாரும் பொது இடங்களில் வீசுவது கிடையாது. சாக்கடை நீரை தங்கள் செடிகளுக்கு பயன்படுத்துகிறார்கள். எங்கள் குழந்தைகள் பாராளுமன்றத்தினர் தங்கள் சுற்றத்தில் வாழும் மக்களின் உடல் நலத்தில் அக்கறைக் கொண்டு பார்த்தீனி செடிகளை அறவே ஒழிக்கும் தீர்மானத்தை எடுத்து, பள்ளி வளாகத்தில் உள்ள அனைத்து பார்த்தீனி செடிகளையும் அகற்றி தூய்மைப்படுத்தினார்கள். அதேபோல் சவேரியார்பாளையத்திலும் ஆலய மைதானத்தை தூய்மைப்படுத்தினார்கள்.

**புதிய பாராளுமன்றங்கள்**

பெரியநாயகி நகர், சவேரியார் பாளையம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகள், குழந்தைகள் பாராளுமன்ற

உறுப்பினர்களுக்கு பதவியேற்பு விழா மிகச் சிறப்பாக நடத்தினார்கள். பெரியநாயகி நகர் வார்டு உறுப்பினர் திரு. ஜான்பீட்டர், அருவி ஒருங்கிணைப்பாளர் திரு. மரிய வசந்த், அருட்சகோதரி செசிலியா மற்றும் அருட்சகோதரி ஜெனோபியா முன்னிலையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அனைத்து குழந்தை அமைச்சர்களும் பொறுப்புணர்வோடு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

### வெற்றிக்கதைகள்: 4
### தூத்துக்குடி மாவட்டம்
### கிராமக் குழந்தைகள் பாராளுமன்றங்கள்

**2**013 அக்டோபர் 2, மகாத்மா காந்தி பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபா கூட்டத்தில் நமது குழந்தைகள் பாராளுமன்ற அமைச்சர்களும், உறுப்பினர்களும் கலந்துகொண்டு, அவரவர் தளங்களில் உள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகளை மனுக்களாக எழுதி பஞ்சாயத்து தலைவர்களிடம் வழங்கினர்.

ஒரு சில பஞ்சாயத்து தலைவர்கள் குழந்தைகள் பாராளுமன்றத்தினர் கிராம சபாவில் கலந்துகொள்வதை வரவேற்றார்கள். கொடுத்த மனுக்களில் அக்கறைகாட்டி குழந்தைகளின் உடனடி தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டது. உதாரணமாக,

1. டி.சண்முகபுரம் கிராமத்தில் மாலை நேர வகுப்புகள் நடத்த இடவசதி.
2. ஆதனூர், மேலசரால் பஞ்சாயத்துகளில் தெருவிளக்குகள் சரிசெய்யப்பட்டன.



3. ஆதனூர், காட்டுநாயக்கன்பட்டி பஞ்சாயத்துகளில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டன.

### வெற்றிக்கதைகள்: 5
### திருச்சி - மாவட்டம்
### குழந்தைகள் பாராளுமன்றங்கள்

**22** உறுப்பினர்களைக் கொண்ட அக்பேதகர் அக்கம் பக்கத்து குழந்தைகள் பாராளுமன்றம் வளர்ந்து மேலும் இரண்டு இடங்களில் பரவியது.

1. மணிகண்டத்தில் தொடங்கப்பட்ட பாராளுமன்றம் 'மேத்தா பட்கர்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இந்தப் பாராளுமன்றம் 24 உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.
2. காந்தி நகரில் தொடங்கப்பட்ட பாராளுமன்றம் "மகாத்மா காந்தி" பெயரில் அழைக்கப்படுகிறது. 21 உறுப்பினர்களைக் கொண்டு செயல்படுகிறது.

இம்மூன்று குழந்தைகள் பாராளுமன்றங்களும் கள்ளிக்குடி என்ற ஒரே பஞ்சாயத்தைச் சேர்ந்தவை.

**பாராளுமன்றங்களின்**
**செயல்பாடுகளும் சாதனைகளும்**

- ★ படிப்பில் பின்தங்கிய மாணவ மாணவிகளுக்கு மாலை வகுப்பு ஆரம்பித்து செயல்பட்டு வருகிறது. ஏராளமான மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்று வருகின்றனர்.
- ★ அக்கம் பக்கத்து குழந்தைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் துணையைக் கொண்டு எங்கள் பகுதியில் உள்ள பொது இடங்கள் சுத்தம் செய்யப்படுகின்றன.
- ★ எங்கள் கிராமத்தில் பொது கழிப்பிடம் தேவை என்பதை அறிந்து மாவட்ட ஆட்சியரிடமும், பஞ்சாயத்து தலைவரிடமும் மனு கொடுக்கப்பட்டது.
- ★ மின் பற்றாக்குறையை சரி செய்வதற்கு மாவட்ட ஆட்சியாளரிடமும்,

மின்சாரத் துறை அமைச்சரிடமும் மனு கொடுக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

- ★ பள்ளி செல்ல வேண்டிய வயதில் வீட்டில் இருக்கும் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப முயற்சிகள் எடுக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது.
- ★ மூன்று ஏழை மக்களுக்கு காலை உணவு மற்றும் தேநீர் அவ்வப்போது அளிக்கப்பட்டது.
- ★ சுற்றுப்புறத் தூய்மையை பாதுகாக்கும் வண்ணம் எங்கள் கிராமத்தில் இரண்டு குப்பைத் தொட்டிகள் வாங்கி வைக்கப்பட்டன.
- ★ எங்கள் கிராமங்களில் குடிநீர் தொட்டியும் அதன் சுற்றுப்புறமும் சுத்திகரிக்கப்பட்டது.
- ★ ஆரட்டரி மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.
- ★ ஆரட்டரியை வழி நடத்துவதற்கு நலசுவாமியார்களுக்கும் அருட் சகோதரிகளுக்கும் பக்கபலமாக இருந்து செயல்படுகிறோம்.
- ★ கிராமத்தில் உள்ள சாக்கடை மற்றும் சாலைகள் சுத்தம் செய்யப்பட்டன.
- ★ தமிழ்நாடு பாண்டிச்சேரி மாநில அளவிலான குழந்தைகள் பாராளுமன்றத்தை வழுப்படுத்தும் வகையில் தஞ்சையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நான்கு குழந்தைகள் கலந்து கொண்டு மாற்றுத்திறன் குறித்த விழிப்புணர்வு பெற்றனர்.

### வெற்றிக்கதைகள்: 6

#### சிவகங்கை மாவட்டம், [illegible] குழந்தைகள் பாராளுமன்றங்கள்

மனிதர் ஒவ்வொருவரும் இவ்வுலகில் வாழ்வதற்காக படைக்கப்பட்டவர்; அழிவதற்காக அல்ல. ஆனால் இன்று பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றது. எனவே, தற்கொலை தடுப்புத் தினமான செப்டம்பர் 10-ஆம் நாள், சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டத்துக்கு உட்பட்ட சிலமங்கலம் பகுதியில் விழிப்புணர்வு பேரணி நடத்த சிலமங்கலம் குழந்தைகள் பாராளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டு, பேரணியும் நடத்தப் பட்டது. பேரணி மட்டுமல்லாமல் கிராமத்து மக்களுக்கு வாழ்க்கையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி, வாழ்க்கையின் வெற்றி தோல்விகளை கையாளவும் சொல்லிக் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் கடந்த ஒரு வருடத்தில் தற்கொலைகள் எதுவும் நடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

● நிகழ்வு

## ஈரோடு மாவட்டம், கஸ்பாபேட்டையில் காமராஜர் பிறந்த நாள் விழா!



தமிழகத்தை பல்வேறு முதலமைச்சர்கள் ஆண்ட போதிலும், மக்களின் மனதில் நீங்காத இடம் பிடித்த முதல் அமைச்சர் ஒரு சிலரே. அவர்களில் முக்கியமானவர் பெரும் தலைவர் காமராசர். இவரின் 112வது பிறந்த நாள் விழா ஜூலை 15-ஆம் நாள் கொண்டாடப்பட்டது. கர்மவீரர் காமராசரின் பெயரில் செயல்படும் குழந்தைகள் பாராளுமன்றம் இந்த விழாவினை நடத்தினோம்.

காமராசரின் பிறந்தநாளை முன்னிட்டு மாணவ மாணவிகளுக்கு கவிதை, கட்டுரை, படம் வரைதல் போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



## வெற்றிக்கதைகள்: 7

### மாலைப் பள்ளி எங்களையும் எங்கள் ஊரையும் முன்னேற்றுகிறது

**வசந்த்**
குறிஞ்சி மலர் மாலைப் பள்ளி
காட்டுநாயக்கன்பட்டி, கீழராம் சங்கம்
தூத்துக்குடி மாவட்டம்

எங்கள் மாலைப் பள்ளி மாலை 6 மணிக்குத் தொடங்குகிறது. திங்கள் முதல் சனிக்கிழமை வரை நடைபெறும். ஞாயிற்றுக் கிழமை குழந்தைகள் பாராளுமன்றம் நடத்து கின்றோம். ஞாயிற்று கிழமைகளில் எங்கள் ஊரைச் சுத்தம் செய்வோம். எங்களின் இத்தகையப் பொறுப்புணர்வையும், பணி களையும் கண்டு ஊர் மக்கள் மகிழ்ந்து பாராட்டுகிறார்கள். நாங்கள் எங்கள் ஊரைச் சுத்தமாக வைத்திருக்கிறோம்.

ஞாயிற்றுக் கிழமை மாலை 7 மணிக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். எனக்கு மாலைப் பள்ளி மிகவும் பிடித் திருக்கிறது. இந்த மாலைப் பள்ளியில் படித்து தான் பள்ளித் தேர்வில் வெற்றிப் பெற்றோம். இந்த மாலைப் பள்ளி இல்லை என்றால் எங்களுக்குப் படிப்பு இல்லை. மாலைப் பள்ளியை கண்காணிக்க வாரந்தோறும் சிஸ்டர் அவர்களும், அண்ணன் அர்ஜுன் அவர்களும் வருவார்கள். மேலும் சிறப்பாக நடக்க ஆலோசனை கூறுவார்கள். இந்த மாலைப் பள்ளி எங்கள் ஊரையும் எங்கள் வாழ்க்கையையும் முன்னேறச் செய்கிறது.

நன்றி!

## வெற்றிக்கதைகள்: 8

### என் உள்ளத்தில் ஒளி ஏற்றிய மாலை நேரப் பள்ளி

**சதீஸ்**
அம்பேத்கர் நகர்
மணிகண்டம், திருச்சி

என் பெயர் சதீஸ். நான் கடந்த 12 வருடங்களாக சலேசியன் சகோதரிகள், திருச்சி, இனியதானம், மணிகண்டத்தில் மாலை வகுப்பு பள்ளி மற்றும் ஆரட்டோரிக்குச் சென்று வருகிறேன். இந்த வகுப்புகளில் நான் மட்டும் பயன்பெறவில்லை, என்னைப் போன்ற பல மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர். இங்கு வரும் மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் படிப்பதற்குத் தேவையான அனைத்தும் கொடுத்து உதவுகிறார்கள். பெற்றோருக்கு ஏற்படும் கவலைகளையும் சிறிது குறைத்து பெற்றோருக்கும் உதவி செய்து வருகின்றனர். மாலை வகுப்பு பள்ளியில் பயிலும்போது தெரியாத பாடங்கள் மற்றும் பொதுஅறிவு சார்ந்த கேள்வி பதில்களை கற்றுக்கொண்டேன்.

இங்கு வந்த பிறகுதான் படிப்பு மட்டுமல்ல, எங்களிடம் ஒளிந்துள்ள விளையாட்டுகள், கவிதை, கட்டுரை எழுதுதல் மற்றும் ஓவியம் வரைதல் போன்ற திறமைகளை வெளிக்கொண்டு வர வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதோடு மட்டுமல்லாமல் எங்களுக்கு நல்ல குணங்களையும் நல்ல பழக்க வழக்கங் களையும் கற்றுக் கொடுத்தார்கள்.

மாலை வகுப்பு பள்ளியில் படிப்பு மட்டுமல்லாமல் எங்களுக்கு மரியன்னை செபம் மற்றும் இயேசுவின் செபங்களைக் கற்றுக் கொடுத்து, "கடவுள் எப்போதும் நம்மைப் பார்க்கிறார். ஆகவே, நாம் தவறு செய்யக்கூடாது" என்று கற்றுக் கொடுத்தனர். எங்கள் வீட்டில் அன்றாடம் ஏற்படும் பிரச்சனைகளை சலேசிய சகோதரிகளிடம் கூறும்போது, அவர்கள் எங்களுக்காக செபிப்பது மன ஆறுதலைத் தரும். பன்னிரண்டாம் வகுப்பு முடிந்த பிறகு தொடர்ந்து என்ன படிக்க வேண்டும் என்று வழிகாட்டி, மேலும் படித்து வாழ்வில் முன்னேற அறிவுரை கூறுவார்கள். தொன் போஸ்கோவின் வாழ்க்கை முறை மற்றும்

அவர் குழந்தைகளிடம் எவ்வாறு நடந்து கொள்வார் என்றும் அவரது கடவுள் பக்தி பற்றியும் கூறி, அவரைப் போல நாங்களும் வாழ்வதற்கு உதவி செய்வார்கள்.

நான் குழந்தைகள் பாராளுமன்றத்தில் பிரதமராக இருக்கிறேன். இந்தப் பாராளு மன்றத்தின் மூலம் குழுவாகச் செயல்படும் திறனைக் கற்றுக்கொண்டேன். பிறருக்கு உதவி செய்ய வேண்டும்; தீங்கு நினைக்கக் கூடாது; தீய வழிகளை நாடக்கூடாது என்பதைக் கற்றுக் கொண்டோம். நல்வழியில் புனித தோன் போஸ்கோவின் பாதையில் நடந்து பிறருக்கு முன்மாதிரியான மாணவனாக திகழ்கிறேன். தொடர்ந்து நல்ல பண்பில் வளர்வேன்.

வீட்டில் அப்பா குடித்துவிட்டு வந்து என்னை படிக்கவிடாமல் தொல்லை கொடுப்பார். அதனால் மாலை நேரப் பள்ளிக்குச் சென்று படிக்க ஆரம்பித்தேன். கடவுள் நேரில் வரமாட்டார் என்ற காரணத்தினால் அவர் சலேசிய சகோ தரிகளை எங்களுக்கு கொடுத்திருக்கிறார் என்று நினைக்கிறேன். இவர்களின் பணி முழுமையாக நிறைவேற, மேலும் பல உள்ளங் களின் வாழ்வில் இவர்கள் ஒளியேற்ற மாலை வகுப்பு மற்றும் ஆராட்சியில் இவர்களுக்காக கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன். நன்றி

## வெற்றிக்கதைகள்: 9

### திருப்பூர் [illegible]

### ஒச்சம்பாளையம் குழந்தைகள் பாராளுமன்றம்

நாங்கள் ஒச்சம்பாளையம் குழந்தைகள் பாராளுமன்ற அமைச்சர்கள். எங்கள் ஊரில் 2014 ஜூலை மாதம்தான் புதிதாக மாலை நேர வகுப்பானது ஆரம்பிக்கப்பட்டது. மாலை நேர வகுப்பிற்கு 40க்கு மேற்பட்ட மாணவர்கள் வருகை புரிகின்றனர். ஆனால், வகுப்புகள் நடத்த இடம் கிடைக்காமல் அலைந்தோம். மாணவர்களின் வருகை மிகவும் குறைய ஆரம்பித்தது. இந்த சூழ்நிலையில்தான் எங்களது ஒச்சம் பாளையம் குழந்தைகள் பாராளுமன்றம் தொடங்கப்பட்டது. தொடர்ந்து எங்களுக்கு குழந்தைகள் பாராளுமன்றத்தின் செயல் பாடுகள் பற்றி அருட்சகோதரி கரோலின் அவர்களால் தெளிவாக விளக்கப்பட்டது. எங்கள் ஊரில் வகுப்புகள் எடுப்பதற்கு வாடகைக்கு வீடு பார்க்குமாறு சகோதரி அவர்கள் கூறினார்கள். ஆகவே, குழந்தைகள் பாராளுமன்ற அமைச்சர்களாகிய நாங்கள் இணைந்து எங்கள் ஊரிலேயே குறைந்த வாடகைக்கு இல்லம் எடுத்தோம். நாங்கள் படிப்பதற்கு ஏற்ற இடமாக இருப்பதற்காக அவற்றை ஒரு ஞாயிறன்று சுத்தம் செய்ய முடிவெடுத்தோம். வெள்ளை அடிப்பதற்கு ஆட்கள் கிடைக்காத காரணத்தினால் நாமதும் செய்யாமல் நாங்களே வெள்ளை அடித்தோம். இது சிறு செயல்பாடுதான். ஆனால் எங்களின் தனி முயற்சி. நாங்கள் இணைந்து செய்த முதல் சிறு சாதனை. இதில் எங்களின் ஒத்துழைப்பும், மாணவர் களின் முன்னேற்றத்திற்காக, மாணவர்களே இணைந்து செயல்படும் செயல்பாடும் அடங்கியுள்ளதில் பெருமை அடைகிறோம். இன்னும் மரியாவா இல்ல அருட் சகோதரிகள், ஆசிரியர்களின் உதவியுடன் இன்னும் அதிக பணிகளில் ஈடுபட்டு எங்களின் உரிமைக்காக நாங்களே உழைக்கத் துடிக்கின்றோம். கண்டிப்பாக வெற்றியும் அடைவோம்.

## வெற்றிக்கதைகள்: 10

### [illegible]

### ஸ்ரீகாந்த்

**ஆதி காலனி, திருப்பூர்**

எனது பெயர் ஸ்ரீகாந்த். வயது 10. ஒன்றாம் வகுப்பு மட்டுமே படித்துள்ளேன். பிறகு எனது படிப்பை நானே தொடரவில்லை. காரணம், எனக்கு திக்கு வாய் என்பதால் எனது வகுப்பு மாணவர்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. "திக்குவாயன்" என்று பட்டப்பெயர் வைத்தும் அழைத்து வந்தனர். ஆகவே மனம் வருந்தினேன். எனது பெற்றோர் எவ்வளவோ முயன்றும் நான் பள்ளிக்குச் செல்லவில்லை. சிறு வயதி லேயே வேலைக்குச் செல்ல ஆரம்பித்தேன். எனது வேலைக்குத் தகுந்த கூலி கிடைக்க வில்லை. என்றாலும் அதையே விரும்பி செய்தேன். மூன்று ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்தேன். படிப்பைப் பற்றி சிந்திக்கவே இல்லை. கடந்த ஜூன் மாதத்தில் ஒரு நாள் திருப்பூர் தன்னார்பந்தல்

மரியாலயாவிலிருந்து அருட்சகோதரிகள் வந்து எங்கள் ஊரில் மாலை நேர வகுப்பு நடைபெற இருப்பதாகவும், அதில் பள்ளி செல்லாதவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவும் கூறினார்கள்.

அங்கு என்ன நடக்கிறது என்பதை பார்ப்பதற்காகத்தான் நான் அங்கு சென்றேன். அவர்களது அணுகுமுறை என்னை மிகவும் கவர்ந்தது. ஆகவே மாலை நேர வகுப்புக்கு செல்ல ஆரம்பித்தேன். நான் திக்குவாய் உள்ள பையன் என்று தெரிந்தும் என்னை உற்சாகப்படுத்தி சத்தமாகப் பேச வைத்தார்கள். நான் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் பார்த்து மகிழ்கின்றார்கள். இப்போது மாலை நேர வகுப்பு எப்போது தொடங்கும் என ஆவலோடு காத்திருக்கிறேன். இப்போதும் காலையில் வேலைக்கு சென்று கொண்டிருக்கிறேன். அருட்சகோதரிகள் என்னை நன்றாக படிக்க வைத்து வரும் ஜூன் மாதம் ஆறாம் வகுப்பில் சேர்த்து விடுவதாகக் கூறுகிறார்கள். எனக்கு இப்போது படிக்க வேண்டும் என்ற ஆர்வம் வந்து விட்டது. அவ்வப்போது நடக்கும் போட்டிகளிலும் பங்கெடுப்பேன். எனது பெற்றோர் என்னைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள். எனது குறையைக் கண்டு சிரித்தவர்கள் மத்தியிலே இது குறை இல்லை என்று கூறி முன்னேற வழி காட்டுகிறார்கள். அவர்களின் வழிகாட்டுதலின்படி நான் நடப்பேன். படித்து ஆசிரியராகி, என்னைப் போல் உள்ள மாணவர்கள் முன்னேற உழைப்பேன். என்னை இனம் கண்டு எனது முன்னேற்றத்திற்காக உழைக்கும் மரியாலயா இல்ல அருட்சகோதரிகளுக்கு எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

## கிராமம்...

கிராமங்களோ சிறியது
அங்குள்ள மக்களின் மனமோ பெரியது
குழந்தைகளின் அழகோ இளமை
கிராமங்களின் அழகோ பசுமை
ஊருக்குள்ளே குழந்தைகள் கூட்டம்
கிராமங்களுக்குள்ளே மரங்கள் கூட்டம்
கிராமத்தில் இருப்பதோ பல வண்ணம்
மக்கள் மனதில் இருப்பதோ கலைவண்ணம்
வானம் இருக்கு மேகத்திற்கு ஜோடியாக
பசுமை இருக்கு கிராமத்திற்கு ஜோடியாக.

**பி.கார்த்திகா**
கழுகாசலபுரம்
ஒன்பதாம் வகுப்பு

### வெற்றிக்கதைகள்: 11

### தனித்திறமைகளை வளர்த்துக் கொண்டேன்

**ஜான்சி**
ஆறாம் வகுப்பு வடக்கியூர்

**ஜா**ன்சி என்கிற நான் வடக்கியூரில் வசித்து வருகிறேன். அக்சிலியம் சலேசிய கன்னியர்கள் நடத்தும் மாலை நேரக் கல்வியில் கடந்த மூன்று ஆண்டுகளாக பயின்று வருகிறேன். இங்கு பயில்வதன் மூலமாக பள்ளியில் தினமும் கொடுக்கும் வீட்டுப் பாடங்களை செய்து முடிப்பதற்கு ஏதுவாக உள்ளது.

மாலை நேரக் கல்வியில் பயில்வதன் மூலம் தமிழில் வார்த்தைகளை வாசித்தல், வாக்கியங்களை வாசித்தல் போன்றவற்றைக் கற்றுக்கொண்டேன். நல்ல ஒழுக்கங்களையும் கற்றுக் கொண்டேன். கணிதத்தில் அடிப்படையான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்றவற்றை எளிய முறையில் கற்றுக் கொண்டேன்.

இங்கு நடக்கும் கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டேன். என் திறமைகளை வெளிப்படுத்த உதவியாக உள்ளது. மேலும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டேன். மாலை நேரக் கல்வியில் கலந்து கொள்வதால் நான் முன்பை விட நன்றாகப் படிக்கிறேன். ஆன்மீகத்தையும் நல்ல ஒழுக்கங்களையும் கற்றுக்கொண்டேன்.



# குப்பைத் தொட்டி குழந்தை!

ஆலமரம் சுற்றவில்லை
ஆலயம் ஏதும் தொழவில்லை
மருத்துவரிடம் செல்லவில்லை
மருந்து ஏதும் உண்ணவில்லை
பத்து மாதம் சுமக்கவில்லை
[illegible] ஏதும் ஏற்படவில்லை
ஆனால் என்னவோ தெரியவில்லை
தினம் தினம் ரகசியமாக
சில குழந்தைகளை ஈன்று
எடுத்து கொடுக்கிறது குப்பைத் தொட்டி

**மு. செல்வ சூர்யா**
ஒன்பதாம் வகுப்பு, கோவை மரியாலயா.

# உரிமைகள்!



ச.ரா. நிலா, வகுப்பு
புலியூரணி, சிவகங்கை மாவட்டம்

கோயிலுக்குச் சென்றேன்
இறையருள் கிடைத்தது

பள்ளிக்குச் சென்றேன்
அறிவு வளர்ந்தது

நூல்பல கற்றேன்
அறிவாளி யானேன்

திறமையை பயன்படுத்தினேன்
வெற்றி கிடைத்தது

மைதானம் சென்றேன்
உடல் வலிமை அடைந்தது

சத்துணவு உண்டேன்
உடல் பலம் பெற்றது

இத்தனையும் எதனால் பெற்றேன்
உன் உரிமையை பயன்படுத்தியதால்!



● கட்டுரை

# பாதுகாப்பு உரிமைகள்!

அன்பார்ந்த குழந்தைகளே!

உங்களுடைய உரிமைகளைப் பற்றி நீங்கள் நிறைய தெரிந்திருப்பீர்கள். அவை 4 நான்கு வகையாக உள்ளன என்பதும் நீங்கள் அறிந்தவையே.

1. வாழ்வதற்கான உரிமை
2. வளர்ச்சிக்கான உரிமை
3. பாதுகாப்பிற்கான உரிமை
4. பங்கேற்பிற்கான உரிமை.

இவற்றில் 3.ஆவதாக உள்ள பாதுகாப்பிற்கான உரிமையைப் பற்றிதான் ஒரு சில வற்றை இந்த கட்டுரையின் மூலம் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

குழந்தைகள் உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ யாராவது துன்புறுத்தினால், அல்லது உங்களை எவராவது கடத்த முயலும்போதோ உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள கொடுக்கப்பட்டவை தான் இந்த பாதுகாப்பு உரிமை ஆகும். மேலே நீங்கள் கண்ட துன்புறுத்தலில், உடல் ரீதியாக அதுவும் பாலியல் ரீதியாக குழந்தைகளை துன்புறுத்துவது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று தான். "நமது உடல் கடவுள் குடி கொண்டிருக்கும் கோயில்" என்பது நம் அனைவரும் அறிந்ததே. கடவுள் குடி கொள்வதற்கு ஏற்ற வகையில் உடலை தூய்மையாக வைத்துக் கொள்ள முயல்கின்றோம். ஆனால், சமூகத்தில் இருக்கின்ற சில தீயஎண்ணம் கொண்டவர்கள், குழந்தைகளை தீய எண்ணத்தோடு கண்ட இடங்களில் தொட்டு, தங்களுடைய காமத்திற்கு ஒன்றும் அறியாத சிறுவர்களை இரையாக்கிக் கொள்வது பெருகி வருகிறது.

குழந்தைகளை கொஞ்சுகிற அவர்களை காம இச்சையோடு கண்ட இடங்களில் தொடுவது, முத்தம் கொடுப்பது, கட்டி அணைப்பது இவை அனைத்தும் இந்த நவீன உலகில் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இதனால் குழந்தைகளின் உடலில் 15, 16 வயதில் சுரக்கக்கூடிய பாலியல் உணர்வை தூண்டக்கூடிய வேதியியல் பொருள் மிக சீக்கிரமாக சுரக்கின்றன என்கிறது ஒரு மருத்துவ ஆய்வு அறிக்கை. இதன் மூலம் குழந்தைகள் மிகச் சிறு வயதிலேயே பல துன்பங்களுக்கு ஆளாகி றார்கள். குறிப்பாக குழந்தைகளின் கவனம் மிக சிறு வயதிலேயே தீய எண்ணங்கள் வளர்ந்து விடுகின்றன. தவறு செய்துவிட் டோம் என்ற குற்ற உணர்வு, மன அழுத்தம், கவனச் சிதறல் போன்ற சிக்கல்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகிறார்கள். எனவே, இத்தகைய துன்பங்களிலிருந்து குழந்தைகள் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அப்பொழுதுதான் எதிர்காலத்தில் பிரச்சினைகள் இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ முடியும்.

இந்த துன்பங்களிலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ள சில யுக்திகளை இங்கு காணலாம்.

★ குழந்தைகளை யார் தொடலாம், எப்போது தொடலாம், எங்கு தொடலாம் என்ற விழிப்புணர்வு தேவையான ஒன்று.

★ ஒருவர் தொடும்போது அது நல்ல விதமான தொடுதலா? கெட்ட விதமான தொடுதலா என்று அறிந்து கொள்ளும் திறன் வேண்டும்.

★ மருத்துவர் ஒரு சில வேளைகளில் தொட வேண்டி வரலாம். ஆனால், பள்ளியிலோ அல்லது மற்ற வெளியிடங்களிலோ யாரும் தொடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

★ ஒவ்வொருவரும் தங்களுக்குச் சொந்தமான உடலில் யாரும் தொட அவசியம் இல்லாத பாகங்கள் என நான்கினைக் கூறலாம்.

1. வாய்
2. மார்பு
3. இரண்டு கால்களுக்கு இடைப்பட்ட பகுதி
4. பின்புறம். இவை நான்கும் எவரும் தொட தேவையில்லாத பாகங்களாகும்.

★ மூன்றாவது நபரின் மடியில் அமர்வதைத் தவிர்க்க வேண்டும்.

★ 2 அல்லது 3 வயதுக்கு மேல் மற்றவர்கள் முன்னிலையில் ஆடை மாற்றிக் கொள்வதை தவிர்க்கவும்.

★ பெற்றோர் அல்லது உறவினர்கள் பெண் குழந்தைகளைப் பார்த்து உனது கணவன் அல்லது ஆண் குழந்தைகளைப் பார்த்து உனது மனைவி என்று கூறினால், அப்படி கூற வேண்டாம் என்று கூறினால், அப்படி கூற வேண்டாம் என்று மறுப்பு தெரிவியுங்கள்.




## பெருந்தலைவர் காமராசர்!

மக்களின் மனதில் ஒரு ரோஜா
மக்கள் மனதிலே காமராஜர்!
பண்புமிக்க ஏழையர்
படித்திடாது உயர்ந்தவர்
துடிப்புமிக்க நல்லவர்
தூயவாழ்க்கை நிறைந்தவர்
தாயகத்தை காத்தவர்
முதல்வர் பதவி வகித்தவர்
முன்னேற்றமே கொடுத்தவர்
மதிய உணவு தந்தவர்
மக்கள் வாழ வாழ்ந்தவர்
கல்விக்கண்ணைத் திறந்தவர்
பல விதத்தில் வல்லவர்
பாராட்டுக் குரியவர்.

**ஆ. பூபதி**

★ குழந்தைகள் எப்போதும் பொருந்தியிருக்க முடியாத நபரை ஒருபோதும் சந்திக்க அனுமதிக்க அனுமதிக்காதீர்கள் அல்லது அவரிடம் அழைத்துச் செல்லாதீர்கள்.

★ குழந்தைகள் திடீரென்று களையிழந்து சோர்வுற்று இருக்கும்போது பொறுமையாக அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டு அவர்களின் பிரச்சினை என்னவென்று கேட்டறிவது அவசியம்.

மேலே குறிப்பிட்ட விசயங்களை நீங்கள் வாழ்க்கையில் சுமுகமான வாழ்க்கையை வாழ இயலும்.



# குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் தேவைகளும்!

எம். சந்தோஷ்
ஏழாம் வகுப்பு, கொண்டசமுத்திரப்பட்டி

"பிறக்கப்படும் அன்பு
மறுக்கப்படும் அன்பு
மறைந்ததுவே கொடுமையானது"

இந்த அன்பு பல குழந்தைகளுக்கு கிடைப்பதில்லை. குழந்தைகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். அவை பற்றி இங்கே காண்போம்.

**குழந்தைகள்**

18வயது பூர்த்தியடையாத அனைவரையும் குழந்தைகள் என்கிறோம். குழந்தைப் பருவத்தில் உடல், மனம் முழுமையாக வளர்ந் திருக்காது. எனவே, தங்களது தேவைக்காக யாரையாவது சார்ந்திருக்க வேண்டிய நிலை.

**குழந்தைத் தொழிலாளர்கள்**

குழந்தைத் தொழிலுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் இருந்த போதிலும், அதனை முழுமையாக ஒழிக்க முடியவில்லை. குழந்தைத் தொழிலை அழித்தொழிக்க வேண்டியவர்களே வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். குடும்ப வறுமை காரணமாக குழந்தைகள் வேலைக்கு செல்ல வேண்டியுள்ளது. பெற்றோர், அரசு, முதலாளிகள் என்று மூன்று முதலைகளின் வாயில் சிக்கித் தப்பிக்கத் தெரியாமல் போன குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம். பெற்றோர்களின் துன்பத்திற்கும் முதலாளிகளின் இன்பத்திற்கும் தங்கள் வாழ்க்கையை மறந்து கண்ணைக் கட்டிக் கொண்டு உழைக்கிறார்கள்.

**தண்டனை**

குழந்தைகளை வீடுகளில் உணவகங்களில் வேலைக்கு அமர்த்தினால் ஒரு வருடம் வரை சிறைத்தண்டனையும் ரூ. 20,000 வரை அபராதமும் விதிக்கப்படும்.

**போதை பழக்கத்திற்கு அடிமையாதல்**

'குடி குடியைக் கெடுக்கும்' என்பதை மறந்து ஏராளமானோர் குடியில் சிக்கி உள்ளனர். வீட்டில் பெற்றோர் குடிப்பதைப் பார்க்கும் சிறுவன் "நம் அப்பா குடிக்கிறார், நாமும் குடித்துப் பார்ப்போம்" என்று குடிக்க ஆசைப் படுகிறான்.

பள்ளி செல்லும்போது தீய நண்பர்களுடன் சேர்ந்து அவர்கள் குடிக்கும்போது இவனும் குடிக்கிறான். இப்படித்தான் ஒரு

குழந்தை போதை பழக்கத்திற்கு அடிமை யாகிறது. முதலில் பெற்றோர்கள் போதை பழக்கங் களிலிருந்து விடுபட்டால்தான் குழந்தை களையும் விடுவிக்க முடியும். சில நாள்களுக்கு முன்பு செய்தித்தாளில் வந்த செய்தி, குடிப்பதற்கு பணம் தரவில்லை யென்று தந்தையே தன் காது கேட்காத, வாய் பேச முடியாத மகனை வெட்டி கொன்ற சம்பவம். எனவே மது அருந்துவதை ஒழிக்க வேண்டும்.

**பாலியல் வன்முறை**

பாலியல் வன்கொடுமை பெண் குழந்தை களுக்கு மட்டுமல்ல ஆண் குழந்தைகளுக்கும் நடக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு செய்தித் தாளில் வந்த ஒரு செய்தி, படித்தோரை அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது. பெங்களூரில் 2 வயது சிறுமியிடம் தவறாக நடந்து கொண்டது. குழந்தைகள் பெற்றோர் அரவணைப்பில் வளர வேண்டும். தற்காப்பு கலைகள் ஒன்றை கற்றுக் கொள்ள வேண்டும். இது போன்ற சம்பவங்கள் நடக்கையில் அதை தன் பெற்றோர்களிடம் கூறவேண்டும் என்று அறிவுரைக் கூறுதல் வேண்டும்.

**பிச்சையெடுக்கும் தொழில்**

குழந்தைகளை கடத்திச் சென்று உறுப்புகளை விற்று பிச்சையெடுக்க வைக்கிறார்கள். குழந்தைகளை பிச்சை யெடுக்க வைத்து அதில் சிலர் உயிர் வாழ்கி றார்கள். புத்தகங்களை பிடிக்க வேண்டிய கையில் பிச்சைப் பாத்திரங்களை பிடிக் கிறார்கள்.

**கல்வி**

குழந்தைகளுக்கு இப்பொழுது 2 வயது ஆகும்போது பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுகிறார்கள். கல்வி என்பது வியாபாரம் ஆகி விட்டது. குழந்தைகள் காலையில் 4 மணிக்கு எழுந்து 6 மணி வரை படித்துவிட்டு விரைவில் பள்ளிக்கு கிளம்பி 9 மணிக்கு பள்ளிக்குச் சென்று 4.30 மணிக்கு வீடு திரும்புகிறார்கள். மறுபடியும் 5 மணிக்கு தமிழ், 6 மணிக்கு ஆங்கிலம், 7 மணிக்கு கணிதம், 8 மணிக்கு அறிவியல் என ஒவ்வொரு பாடத்திற்கும் தனிப்பாட வகுப்பு செல்கிறது. இயல்பாக வாழ்கின்றனர் சில குழந்தைகள். ஒரு சில குழந்தைகள் பள்ளியில் இருந்து வந்தபிறகு வேலைக்குச் செல்கின்றனர். இதனால் குழந்தைகள் தன் சந்தோசத்தை இழக்கின்றன. விளையாட்டு நேரத்தை இழக்கின்றன.

**குழந்தைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகள்**

- ★ குழந்தையின் உடலும் மனமும் பாதிப்பு ஏற்படும் வகையில் தண்டித்தல்
- ★ குழந்தைகளை வீட்டு வேலையில் ஈடுபடுத்தி அவர்களின் கல்வி மற்றும் பொழுதுபோக்கை பாதிக்கச் செய்தல்.
- ★ குழந்தையின் கல்வியைத் தடை செய்தல்.
- ★ குழந்தைகளை கட்டாயப்படுத்தி தொடச் செய்தல்.
- ★ அடித்து துன்புறுத்தல், திட்டுதல்.
- ★ விரும்பமில்லாத இடங்களில் தொடுதல்.
- ★ கொடுமைப்படுத்தல், கேலி செய்தல்.


இது போன்ற பல்வேறு கொடுமைகள் குழந்தைகளுக்கு இழைக்கப்படுகின்றன.

**குழந்தைகளுக்குத் தேவையானவை**

- ★ நிபந்தனையற்ற அன்பு
- ★ நம்பிக்கைக்குரிய நட்பு
- ★ உறைவிடம்
- ★ அரவணைப்பு
- ★ தரமான கல்வி
- ★ தரமான உணவு
- ★ பயிற்சி
- ★ ஆரோக்கியமான சூழ்நிலை

இவை அனைத்தும் குழந்தைகளுக்குத் தேவை. ஆனால், இன்றைய குழந்தைகளுக்கு இவை முழுமையாக கிடைப்பதில்லை.

'இளமையில் கல்' என்ற பழமொழிக்கு ஏற்ப குழந்தைகளுக்குத் தேவையான கல்வி புகட்ட வேண்டும். குழந்தைகளுக்குத் தேவையான அனைத்தும் கிடைக்க வேண்டும்.


பெயிண்ட் அடிக்கும்
குழந்தைத் தொழிலாளி
கால் தவறி கீழே விழுந்து
மரணமடைகிறான்
ஓவியம் :
ஜெ.கனிஷ்குமார்
அனுப்பர்பாளையம், திருப்பூர்


எங்கள் கிராமமும் குழந்தைகளும்


குழந்தைத் தொழிலாளர்
ஓவியம் :
ஆர். ஜஸ்மன்ராஜ்
எட்டாம் வகுப்பு
தாண்டியும், சிவகங்கை மாவட்டம்


குழந்தைத் தொழிலாளர்
ஓவியம் :
ஆ. ஆல்பிரின் மயன்
எட்டாம் வகுப்பு, உசிலம்பட்டி




# குழந்தைகளின் இன்றைய நிலை!

கட்டுரை :1
ர.தீபிகா
எட்டாம் வகுப்பு, அசநல்லிபாளையம்.

இன்றைய காலகட்டத்தில் குழந்தைகளுக்கு எவ்வளவுதான் உரிமைகளும் சட்டங்களும் இருந்தாலும், இன்னும் நம் நாட்டில், ஊரில் குழந்தைகளை சிசுக் கொலை செய்வோரும், குழந்தைகளை வேலைக்கு அனுப்புவோரும் இருக்கின்றனர்.

ஒழுக்கம், அறிவு, வாழ்விற்கான முன்னேற்றப் பாதையை கற்றுக் கொடுக்க வேண்டிய ஆசிரியரிடம் கூட குழந்தைகள் பாதுகாப்பற்ற நிலையே உள்ளது.

வறுமை என்ற குடும்பச் சூழலை காரணம் காட்டி குழந்தைகளை வேலைக்கு அனுப்புகிறார்கள். அதே வறுமையைக் கூறி சிறு வயதிலேயே திருமணமும் செய்து வைத்து விடுகிறார்கள்.

இதனையெல்லாம் தனக்குச் சாதகமாக பயன்படுத்தும் முதலாளிகள் குழந்தைகளின் உடல் உழைப்பைச் சுரண்டி அதிலே சொகுசான வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள்.

கட்டுரை :2
ம.செனாமியா
எட்டாம் வகுப்பு, பொத்தம்பாளையம்.

'இளமையில் கல்' என்கிறது முதுமொழி. பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதில் பாலர்கள் வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். இதனால் அவர்கள் எழுத்தறிவைப் பெற முடியாமல் போவதுடன், வாழ்க்கைக்குத் தேவையான அறிவைப் பெறவும் இயலாமல் போகிறது.

**வறுமையே காரணம்**

சிறு வயதில் குழந்தைகளுக்கு வாழ்க்கையைப் பற்றிய விழிப்புணர்வு இருப்பதில்லை. எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பது தெரியாது. எனவே அவர்களை சரியாக வழி நடத்தும் பொறுப்பு பெற்றோர்களுக்கே உரியது. சில குடும்பங்களில் தந்தை மதுவுக்கு அடிமையாகி குழந்தைகள் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது.

நம் கர்மவீரர் காமராசர் அவர்கள் ஏழ்மையினால் குழந்தைகளின் கல்வி தடைபட்டுவிடக்கூடாது என்ற உயர்ந்த நோக்கிலேயே பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற பழமொழிக்கு ஏற்ப குழந்தைகளுக்கு இளம் வயதில் கல்வி கற்பிக்க வேண்டியது பெரியவர்களின் கடமை. அவ்வாறு செய்யத் தவறினால் அது குழந்தைகளின் எதிர்காலத்தையே பாழடித்து விடும்.

குழந்தைகளுக்கு இயல்பாகவே படிப்பிலும், விளையாட்டிலும் ஆர்வம் இருக்கிறது. அதற்கு எதிராக அவர்களை வேலைக்கு அனுப்புவதால் பின்னாளில் உலகத்தைப் பற்றிய அறிவின்றி அவர்கள் அல்லலுறுவார்கள். பல விபத்துகள் நடக்கவும் வாய்ப்பு உள்ளதுகூ

**பெற்றோர் கடமை**

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதன் முக்கியப் பொறுப்பு பெற்றோர்க்கே உரியது. வறுமையைக் காரணம் காட்டியோ அல்லது பணத் தேவையைக் காரணம் காட்டியோ குழந்தைகளை வேலைக்கு அனுப்புதல் கூடாது. அன்றாடத் தேவை களைக் குறைத்தேனும் அவர்களை கல்வி கற்க அனுப்ப வேண்டும். இதற்காக அரசு அளித்து வரும் நலத் திட்டங்களை அறிந்து அதிகாரிகளை அணுகி தேவையான உதவிகளைப் பெற வேண்டும்.

ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் குழந்தைகளிடம் இருக்கிறது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தைகள் பெற வேண்டிய கல்வியை அவர்களுக்கு அளிக்க வேண்டிய பொறுப்பு இந்த சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு மனிதருக்கும் உரியது என்பதை அறிந்து அவர்களை பள்ளிக்கு அனுப்ப அனைவரும் முன்வர வேண்டும்.



கட்டுரை : 3
ஜெ.கனிக்குமார்
அருப்பர்பாளையம், திருப்பூர்

"கொடிது கொடிது இளமையில் வறுமை" என்றார் ஔவை. இளமைப் பருவத்தில் கல்வி கற்கச் செல்லாமல் கூலி வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட தற்குக் காரணம் வறுமைதான். இதற்காக ஒவ்வோர் இந்தியனும் வேதனைப்பட வேண்டும். இந்தியாவின் 'வருங்காலத் தூண்கள்' என்று செயல்படுகிற சிறார்களை கூலி வேலைக்கு அனுப்புவதற்காகவா நாம் சுதந்திரம் பெற்றோம்?

**குழந்தைத் தொழிலாளர்கள்**

பதினான்கு வயதிற்குட்பட்ட தொழிலா ளர்களை குழந்தைத் தொழிலாளர் எனப்படுகின்றனர். இவர்களை வேலைக் கனுப்பும் பெற்றோர்களையும், வேலை வாங்கும் பெரிய மனிதர்களையும் தண்டிக்க வேண்டும். பதினான்கும் விளையாத அந்தப் பிஞ்சுக் கரங்கள் பள்ளியிலேயே படங்கள் ஒட்டி மதிப்பெண் பெறவேண்டியவர்கள், திரைப்படங்களின் சுவரொட்டியை ஒட்டுகின்றனர்.

சூறு வெடி, ஒத்தை வெடி, கம்பி மத்தாப்பு கொளுத்தி மகிழ வேண்டிய வயதில், அவற்றை செய்து தந்து, சிறு கூலி பெற்று உடல் நலத்தை இழக்கிறார்கள். சில நேரம் உயிரைக் கூட இழக்கிறார்கள்.

குளிர்பானம், பால் குடித்து வளர வேண்டிய வயதில், குடிகாரர்கள்



குடியிருக்கும் மதுக் கடைகளில் குளிர்பானம் கலந்து கொடுக்கிறார்கள்.

கட்டடம் கட்டும் பணிகளில் கையாட்களாக கையாளாகாத பெற்றோர்களுக்காக கடின உழைப்பு உழைக்கிறார்கள்.

பொட்டலம் மடித்துக் கொடுத்து புகையிலை இழுக்கின்றனர்.

**பெற்றோர் பொறுப்பு**

குழந்தைகளை வளர்த்து ஆளாக்க முடியாதவர்கள் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதே தவறு மட்டுமன்று, குற்றமாகும். பெற்று வளர்க்க முடிந்தவர்கள் மட்டுமே குழந்தைகளை பெறுங்கள். பெற்றுக் கொண்ட பிறகு எப்பாடு பட்டாவது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புங்கள்.

பிள்ளைகளின் பெருமைகளைப் பெற்றோர்கள் உணரவேண்டும். அரசாங்கம் இன்னும் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் குழந்தைத் தொழிலாளராவதை அறவே தடுத்தாக வேண்டும். குழந்தைகளைத் தொழிலாளர் ஆக்கும் முதலாளிகளையும் பெற்றோர்களையும் தண்டிக்கக் கடுமையான சட்டம் கொண்டு வர வேண்டும். அனாதைக் குழந்தைகளை அரசாங்கமே தத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

“பிச்சைப் புகினும் கற்கை நன்றே” என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்தால் எல்லாம் நல்லவையாகும்.

**குழந்தைத் தொழிலாளி மரணம்**

ஒரு மாணவன், அவன் குடும்பக் கஷ்டம் காரணமாக தகப்பனாருடன் தினந்தோறும் வேலைக்குப் போய் கஷ்டப்பட்டு அவனது வேலையைக் கற்றுக் கொண்டான். தொடர்ந்து வேலை செய்து சம்பாதித்து வந்தான். திடீரென்று அந்த மாணவன் கால் தவறி கீழே விழுந்து இறந்து விட்டான். மகனை இழந்த தாயும் தந்தையும் “பள்ளிக்கு போக வேண்டிய வயதில் வேலைக்கு அனுப்பியதால் எங்கள் மகனை இழந்து விட்டோமே” என்று கதறி அழுதனர். இது போன்ற விபரீதம் நடக்காமல் இருக்க வேண்டுமானால் குழந்தைகளை வேலைக்கு அனுப்பாதீர்கள், பள்ளிக்கு அனுப்புங்கள்.

**கட்டுரை : 4**


**ஜெயலட்சுமி**
நான்காம் வகுப்பு புலியூரணி
சிவகங்கை மாவட்டம்


குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று. தெய்வகுணம் கொண்ட குழந்தைகளுக்கும் சில உரிமைகள் உண்டு.

பல நேரங்களில் குழந்தைகளைப் பெற்றோர்கள் ஏதேதோ காரணங்களுக்காக அடிப்பதைப் பார்க்கிறோம். பக்கத்து வீட்டுக்காரர்கள் கேட்டால், “என் குழந்தையை அடிப்பேன், கொல்லுவேன். நீ யாரு கேட்க?” என்று திட்டுவார்கள். அது அந்தக் காலம். இன்றைக்கு தனது தந்தை தன்னை கொடுமைப்படுத்துவதாக ஒரு குழந்தை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால், தந்தையைச் சிறைக்கு அனுப்பிவிட்டு குழந்தையை குழந்தைகள் காப்பகத்திற்கு பாதுகாப்பாக அனுப்பி வைப்பார்கள்.

குழந்தைகளுக்கென்று சில உரிமைகள் இருக்கின்றன. யாரும் அவர்களிடமிருந்து அந்த உரிமைகளை எடுக்க முடியாது. கூடாது என சட்டங்கள் இயற்றப்

பட்டுள்ளன.

14 வயது வரையிலானவரை குழந்தைகள் என சட்டம் கூறுகிறது. இவர்களது சிறப்பு உரிமைகளாக விளையாடும் உரிமை, தனது உணவுக்காக உழைக்காமல் தனது பெற்றோரையோ அல்லது அரசையோ சார்ந்து வாழும் உரிமை, கல்வி கற்பதற்கான உரிமை ஆகியவை உள்ளன.

குழந்தைத் தொழிலாளர் சட்டமும் உள்ளது.

25 குழந்தைகள் இருக்கும் ஊர்களில் ஏதாவது ஒரு கல்வி அமைப்பை நிறுவ வேண்டும் என அரசு செயல்படுகின்றது. எல்லா ஊர்களிலும் குழந்தைகளுக்கென விளையாட்டிடம் ஒதுக்கித் தர வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

குழந்தைப் பருவம் என்பது மகிழ்ச்சிகரமானது. குழந்தைப் பருவத்தின் மகிழ்ச்சியை யாரும் இழந்துவிடக்கூடாது என்பதுதான் குழந்தைகளுக்கான உரிமைகள் அறிவிக்கப் பட்டதன் நோக்கம். ஓடி ஆடி விளையாடி, கல்வியும் கலைகளும் கற்று எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்பார்க்கும் வாய்ப்பு எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைக்க வேண்டும்.

எனவே, குழந்தை உரிமைகளை காப்போம். குழந்தைகளை தொழிலாளர்கள் ஆக்குவதை எப்போதும் எதிர்ப்போம்.



எனக்கு 6 நாணயமான
நண்பர்கள் இருக்கிறார்கள்.
அவர்கள்தான் எனக்கு எல்லாம்
கற்றுத் தருகிறார்கள்.
அவர்களுடைய பெயர்கள்:
எங்கே? ஏன்?
எப்போது? ஏன்?
எப்படி? யார்?
- ருத்யார்டு கிப்ளிங்

## சோதனையை சாதனையாக்குவேன்...



அரசின் சட்டம்
அனைவருக்கும் கல்வி.
வறுமையை அகற்ற
வேலைக்குப் போகிறார்கள் பெற்றோர்.
நாங்கள் கல்வி கற்காவிட்டால்
பரவாயில்லை, நீயாவது நன்றாக படி
என்பது அவர்களின் ஆசை.

அதிகாலை எழுகிறேன்
ஆர்வமாய் படிக்கிறேன்
வீட்டில் வேலை செய்கிறேன்
துள்ளி ஓடி பள்ளிக்குச் செல்கிறேன்
பாங்காய் பாடம் படிக்கிறேன்
இலட்சியம் நோக்கி ஓடுகிறேன்
சோதனையை சாதனையாக்குவேன்.

**கே. மாலினி**
ஆறாம் வகுப்பு
வேம்பனி.

● கவிதைகள்



குழந்தையின்
அணைப்பில்
சுகமாய் உறங்கிக்
கொண்டிருக்கிறது
கரடி பொம்மை.

**ஏ.மணிவேல்**, நான்காம் வகுப்பு
அச்சம்பட்டி, சிவகங்கை மாவட்டம்.

## வாழையடி வாழையாய் வளரும் குழந்தைகள்



க.சவிதா,
ஒன்பதாம் வகுப்பு,
அத்திப்பாளையம், கோவை மாவட்டம்.

அன்பு மதத்தைச் சேர்ந்தவர்கள்
அன்னை வடிவாய் நின்றவர்கள்
அறிவுக் கோயிலைச் சமைத்தவர்கள்
இருண்ட வீட்டின் அவலத்தைக் காட்டியவர்கள்
இயற்கையை அழகின் சிரிப்பாகத் தந்தவர்கள்
குடும்ப விளக்கின் அருமை சொன்னவர்கள்
பெண்மையின் மேன்மை வளர்த்தவர்கள்
சங்கத் தமிழ் கற்று, சாகாத்தமிழ் கற்று
முத்தமிழும் அறிந்து, மூவா மருந்தாய் மலர்ந்து
திருவள்ளுவப் பாலை சுவைத்து,
பிசிராந்தியை நட்பாய் வளர்த்து
வாணிதாசன், வண்ணதாசன், கண்ணதாசன், சுரதா- வினைப் போல
வாழையடி வாழையாய் என்றும் வளர்பவர் குழந்தைகள்
கல் நெஞ்சம் இல்லாமல், கருணை நெஞ்சத்தைக் கொண்டு
சுயநலமாய் இல்லாமல், பொதுநலமாய் இருப்பவரே
குழந்தைகளும் எங்களும் போலிருக்கும் கிராமமும்.
தேடிய கருத்தைத் தேனாய்த் தந்தும்
குயிலின் 'தூதாய்க் கூவினாலும்'
குழந்தைகளைப் பற்றி
குறையொன்றும் இல்லையே!

## குழந்தைகள்...

சின்னச் சின்னக் குழந்தையம்மா
சித்திரம் போல் சிரிக்குதம்மா
மண்ணில் வந்த சொர்க்கமம்மா
மழலையும் அமுதமம்மா.

தென்றலொன்று ஆடிவந்து
தேன்மழலைச் சொல்பயின்று
என்றனிரு செவிகளிலே
இன்னிசையைத் தேக்குதம்மா.

**ஏ. பாலாஜி**
பத்தாம் வகுப்பு
மணிகண்டம்,
திருச்சி மாவட்டம்


## ஆனந்த கண்ணீர்...

கண்ணில் உள்ள கண்ணீர்
என் குழந்தையின்
மகிழ்ச்சியைக் கண்டு
மகிழ்கிறது.
இதுதான் பாசம்.

நவீன்
மூன்றாம் வகுப்பு
வடக்கியூர்

முக்கனிகளுள்
ஓர் எழுத்துச் சொல் - **மா**
ஆங்கில மாதங்களில்
ஓர் எழுத்துச் சொல் - **மே**
தமிழ் மாதங்களில்
ஓர் எழுத்துச் சொல் - **தை**
இம்மூன்றும் ஒன்று சேர்ந்து
**மாமேதை** ஆனது

# மழைநீர் உயிர்நீர்



மழை நீர் கொண்டு வரும் குழாயை வடிகட்டி தொட்டியுடன் இணைத்தல்.

தண்ணீரைத் தொட்டியில் சேமித்தல்.

மிகுதியான நீரைத் தரைமட்ட தொட்டியில் சேகரித்தல்.

உபரிநீரை நிலத்தடியில் செறிவூட்டல்.

குழந்தைகளும் மழைநீர் சேமிப்பில் ஈடுபட வேண்டும்.

மரம் வளர்ப்போம். மழை பெறுவோம்.

மழை நீர் உயிர் நீர்.

மழையே மழையே வா வா!

**ஆர். முத்துமணி**
நான்காம் வகுப்பு
அப்பணம்பட்டி

# கவிதைகள்

## ஆசிரியர்!

பகுத்தறிவு எனும் கலப்பை கொண்டு
அறியாமை எனும் நிலத்தை உழுது
கல்வி எனும் விதை விதைத்து
கல்வியாளராக எங்களை களம் சேர்க்கும்
உன்னத விவசாயிகள் ஆசிரியர்கள்.

## வாழ்க்கை!

நேரத்தை வீணாக்கும்போது
கடிகாரத்தைப் பார்
ஓடுவது முள் அல்ல
உன் வாழ்க்கை.

## உன்னை அறிந்தால்!

விடியும் என்று
விண்ணை நம்புகிற நீ
முடியும் என்று
உன்னை நம்பு.
உலகம் உன் கையில்!

ஆர். அற்புதராஜ்
சி. ஜெனிஃபர்
தா. அதிஷ்டலட்சுமி



# விடுகதைகள்

1
உதைக்கத் தெரிந்தவனுக்கு
உழைக்கவும் தெரியும்.
அது என்ன?

2
அடிபட்டவன் அழுதால்
அதுவே ஆனந்த ராகம்
பலருக்கு. அது என்ன?

3
உணவைப் பரிமாறுவான்
உண்ணமாட்டான்.
அவன் யார்?

4
ஒத்தைக்கால் கோழிக்கு
வயிறு நிறைய முட்டை.
அது என்ன?

5
உயரப் பறப்பவனுக்கு
வால் உண்டு. கால் இல்லை.
அவன் யார்?

6
சமாதானத் தூதுவன்
சிறகடித்து பறக்கிறான்.
அவன் யார்?

7
கால்கள் நான்கு நடக்காது
கண் ஆயிரம் இமைக்காது
அது என்ன?

8
காதைத் திருகினால்
கதை சொல்லுவான்
அவன் யார்?

9
அலையில் பிறந்தவன்
ஆகாயத்தில் பறக்கிறான்
அவன் யார்?

10
இரண்டு கிணறுக்கு
ஒரு பாலம்.
அது என்ன?

11
வேட்டு இல்லாமல் வெடிக்கும்
இரட்டைக்குழல் துப்பாக்கி
அது என்ன?

12
எழுதத் தெரிந்தவருக்கும்
படிக்கத் தெரியாது.
அவர் யார்?

13
போனால் வராது
போகும்போது பேசாது
அது என்ன?

14
எவர் வீட்டுக்கும் ஒரே முற்றம்
முற்றம் முழுக்க
அழகுக் கோலம்.
அது என்ன?

15
உள்ளே இருப்பவன்
வெளியே உருகுவான்
அவன் யார்?

16
பஞ்சைத் தின்று
பருத்து கிடப்பான்
உறங்க மாட்டான்
உறங்க வைப்பான்
அவன் யார்?

17
ஒற்றைக் கண்ணன்
ஓடி ஓடி ஓட்டையை
அடைக்கிறான்.
அவன் யார்?

(விடைகள் 40ம் பக்கம்)




# குழந்தைகளின் உரிமைகளும் கடமைகளும்!

**ஹா**ய் குட்டீஸ்,

மனித வாழ்வின் வரலாற்றில் மிக மதிப்பிற்குரிய செயலாக, உயரிய போராட்டமாகக் கருதப்படுவது என்ன தெரியுமா? தனி மனித அல்லது சமூக உரிமைக்காக குரல் கொடுப்பது, பெற்ற உரிமையை பேணி பாதுகாப்பது, உரிமைகள் மறுக்கப்படும் பட்சத்தில் அதற்காக போராட துணிபவர்களையே வரலாறு போற்றி மகிழ்கிறது. அவர்களே வரலாற்று நாயகர்கள்.

மனித உரிமைகள் அனைவருக்கும் பொதுவானது. சமமானது. பாரபட்சமற்றது. உலக நாடுகளும் தலைவர்களும் குழந்தைகளாகிய உங்களுக்கு தனிப்பட்ட உரிமையை அளித்துள்ளனர். உங்களுக்கான உரிமையை நீங்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். உரிமைகள் மறுக்கப்படும் குழந்தைகள் சார்பாக நீங்களும் போராட தயங்கக் கூடாது.

மத்திய, மாநில அரசுகளே உங்கள் உரிமைக்காக, உங்கள் நண்பர்களுக்காக, நீங்கள் குரல் கொடுக்க உங்களை அழைக்கிறது 1098 என்ற இலவச தொலைபேசி வாயிலாக நாட்டின் எந்த மூலை முடுக்கில் இருந்தும், குழந்தைகளை பாதிக்கும் எந்த பிரச்சினைகளுக்கும் சட்டபடி தீர்வு காணலாம். **Just dial 1098** ஒரே ஒரு இலவச அழைப்பு. நீ சந்திக்கும் பாதிக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்டு, நொறுக்கப்படும் குழந்தைகளின் வாழ்வை வளமாக்கும்.

நம் உரிமைகள் என்னவென்று தெரிந்திருந்தால்தானே, அதன்படி பாதுகாப்பான, வளமான குழந்தை பருவத்தை அனுபவிக்க முடியும். பாதிக்கப்படும் பட்சத்தில் அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்காக நான் குரல் கொடுக்க முடியும். குழந்தைகளின் அடிப்படை உரிமைகளான வாழ்வுரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்புரிமை, பங்கேற்கும் உரிமை எல்லா குழந்தைகளும் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். உரிமைகளோடு கடமைகளையும் உணர்ந்து வாழ்வதுதான் மனித வாழ்வு. உரிமைகளோடு கடமைகளையும் அறிந்து அதன்படி வாழ்ந்தால் நாமும் மனித மாண்போடு வாழலாம். மனிதர்களை மனிதர்களாக மதித்து மனிதம் போற்றும் மாமனிதர்களாகலாம்.

| உரிமைகள் | கடமைகள் |
|---|---|
| 1. எந்தவித பாகுபாடும் இன்றி தனக்கான பெயரையும் குடியுரிமையையும் குடும்பத்தையும் பெறும் உரிமை. | 1. நாட்டின் சட்ட திட்டங்களை மதித்து நடக்க வேண்டும். |
| 2. தன் கருத்துகளை பயமின்றி வெளிப் படுத்தும் உரிமை | 2. அடுத்தவர்களின் கருத்துகளை மதித்து நடத்தல் |
| 3. படிக்கும் பள்ளி செல்லும் உரிமை | 3. பள்ளியின் சட்ட திட்டங்களையும் ஆசிரியர்களையும் மதித்து நடத்தல் |
| 4. உடல் மன நல பாதுகாப்பு பெறும் உரிமை | 4. தன் உடல் நலம் காத்து சுகாதாரம் பேணுதல் |
| 5. சுத்தமான உணவும் நீரும் பெறும் உரிமை | 5. உணவையும் நீரையும் வீணாக்காமல் தேவைக்கேற்ப பொறுப்புடன் பயன் படுத்துதல் |
| 6. பொறுப்பான குடும்பத்தில் பாதுகாப்பும் அக்கறையும் பெற்று, நல் வளர்ச்சி பெறும் உரிமை | 6. பெற்றோர்கள், பெரியோர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை மதித்து நடத்தல் |
| 7. கரண்டலுக்கு எதிராக பாதுகாப்பு பெறும் உரிமை | 7. வன்முறை, கரண்டல் ஆகிய தீய செயல்களில் ஈடுபடக் கூடாது. |
| 8. வன்முறை மற்றும் பல்வகையான தாக்குதலுக்கு பலியாகாமல் பாதுகாப்பு பெறும் உரிமை | 8. அடுத்தவர்களை சுரண்டிப் பிழைக்கா பொறுப்பான வாழ்வு வேண்டும். |

இந்திய திருநாட்டில் 14ல் ஒரு குழந்தை அதாவது ஒவ்வொரு ஆண்டும் 1.9 மில்லியன் குழந்தைகள் ஐந்து வயதுக்கு முன்பே இறந்து விடுகிறார்கள். 2.5 மில்லியன் குழந்தைகள் அனாதைகளாக்கப்படுகிறார்கள். 10ல் 5 பேர் வறுமையில் வாடுகிறார்கள். குழந்தைத் தொழிலில் நம் நாடு முதல் இடம். இவர்களின் குழந்தைப் பருவத்தை மீட்டெடுக்க வேண்டாமா? நீ அனுபவிக்கும் உரிமைகள் அவர்களுக்கும் கிடைக்க வேண்டாமா? முயல்வோமா...

- சகோதரி ஜெயமணி

## கிராமமும் குழந்தைகளும்...

● கவிதை

சின்னச் சின்ன குழந்தையம்மா
சித்திரம்போல் சிரிக்குதம்மா!
மண்ணில் வந்த சொர்க்கமம்மா!
மழலையும் அமுதமம்மா!

தென்றலொன்று ஆடிவந்து
தேன்மழலைச் சொல் பயின்று
என்றுமிரு செவிகளிலே
இன்னிசையைத் தேக்குதம்மா!

குழந்தைகள் இல்லாத கிராமம்
குன்றுபோல் ஒரு சிரமம்!
அத்தனை உறவும் ஓய்வு வெறுத்து
அன்போடு இன்பம் தேடுதே!

**திருமூர்த்தி**
ஒன்பதாம் வகுப்பு
கருணைக்கண்மாய் குழந்தைகள் பாராளுமன்றம்
சிவகங்கை மாவட்டம்.




# பாலியல் தொந்தரவுகளும் தண்டனைகளும்!

பி.சேகரன்
எட்டாம் வகுப்பு, உசிலம்பட்டி

குழந்தைகளிடம் தவறான நோக்கத்தில் முத்தமிடுதல், மறைவான பாகங்களைத் தொடுதல் போன்ற செயல்களில் பெரியவர்கள் ஈடுபட்டால் அதை பாலியல் தொந்தரவாகக் கருதி 3 முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

18 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வற்புறுத்தி சம்மதம் பெற்றோ அல்லது சம்மதம் இல்லாமலோ பாலியல் உறவுக்கு உட்படுத்தினால் குறைந்த பட்சமாக 7 ஆண்டுகளும் அதிக பட்சமாக ஆயுள் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

குழந்தைகளின் ஆபாச படங்களை வைத்திருப்பதும், அதை ஊடகங்களில் பயன்படுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமும் வழங்கப்படும். குற்றமிழைத்தவர் இரண்டாம் முறையோ அல்லது தொடர்ந்து குற்றமிழைத்தாலோ 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் அபராதமும் வழங்கப்படும்.

குழந்தைகளின் ஆபாசப் படங்களை விற்பனைக்காக பயன் படுத்தினால் 3 வருட சிறைத் தண்டனையும் அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படலாம்.

குழந்தைகளிடம் பாலியல் உணர்வைத் தூண்டும் விதமாக பேசுவதோ, செய்கைகள் வழியாக வெளிப்படுத்துவதோ குழந்தைகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுப்பதாக கருதப்பட்டு அவர்களுக்கு 3 வருட சிறைத்தண்டனையோ அபராதமோ விதிக்கப்படலாம்.

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் பெரும்பாலும் அறிமுகமான நபர்களாலேயே நடக்கின்றன. பாதிப்பிற்குள்ளானவர்கள், வெளியில் தெரிந்தால் அவமானம் எனக் கருதுவதால் பல சம்பவங்கள் மறைக்கப்படுகின்ற. இவ்வாறு குற்றங்கள் மறைக்கப்படுவதால் குற்றவாளிகள் எளிதில் தப்பித்து விடுகிறார்கள். இதனால் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் இந்தகைய வன்கொடுமைகள் குறித்து குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது நமது கடமையாகும்.



## மருந்துக் காற்றை சுவாசிக்கிறேன்...

பட்டாம் பூச்சியாய்
பறக்க நினைத்தேன்
சிறகொடித்து அனுப்பினாய்
பட்டாசு தீப்பெட்டி தொழிற்சாலைக்கு.

கையில் புத்தகம் எடுத்தால்
அதைப் பிடுங்கி வீசி எறிந்தாய்.
விடியும் காலையில் என்னை எழுப்பினாய்
கம்பெனி பேருந்து சத்தம் கேட்டு.

சுகாதார காற்றை
சுவாசிக்க வேண்டிய நான்
மருந்துக் காற்றை சுவாசிக்கிறேன்
நோயை விலை கொடுத்து வாங்குகிறேன்.

நோயில் படுத்தால் அடி உதை தான்
பெற்றோரே.
என் நிலை மாறுமா!

**கே. ராஜேஷ்**
ஆறாம் வகுப்பு, புலியூரணி

## மழை

இசை வாத்தியங்கள்
ஏதும் கையில் இல்லை
ஒவ்வொரு வீட்டின் கூரை மீதும்
உன் கவடு பதிவதால்.

**ஆர். தமிழ்ச்செல்வன்**
ஒன்பதாம் வகுப்பு

## வாராதோ வசந்தகாலம்...

ஏடு தூக்கி கல்வி கற்கும்
வாய்ப்பு எனக்கு இல்லையே
வாட்டும் வறுமைப் பிணியால்
செங்கல் சுமந்து வயிற்றைக் கழுவ
பூமியில் பிறந்தேனா?
வேலைக்கு விடைகொடுக்க
பள்ளிக்கு படை எடுக்க
மற்றவர் என்னை மதிக்க
செங்கல் சுமப்பதை நிறுத்த
அனைவருடன் சீரும் சிறப்போடு வாழ
பிறக்காதோ புதிய நாள்
வாராதோ வசந்த காலம்.

**ரா. கவிதா**
ஆறாம் வகுப்பு
சேம்பனி, சிவகங்கை மாவட்டம்





● பாடல்

# நோயற்ற வாழ்வு!

**நோ**யற்ற வாழ்வைப் போல செல்வம் வேறில்லை
நோயின்றி வாழ்ந்து விட்டால் துன்பமே இல்லை.
(நோயற்ற)

வீட்டுக்குள்ளே சிதறிக்கிடக்கும் குப்பைகளையே நீ
கூட்டி அள்ளி கூடையிலே கொட்டிடு வெளியே
நோய்களை உண்டு பண்ணும் கிருமிகளுமே - உன்
வீட்டை விட்டு அப்பொழுதே அகன்று விடுமே
(நோயற்ற)

வீட்டைச் சுற்றி தண்ணீரை தேங்க விட்டாயே - நீ
கூட்டமாக கொசுக்களையே வசிக்க விட்டாயே
வேலை அசதியிலேயே இரசில் படுத்து விட்டாயே - மிக
வசதியாக உன் இரத்தத்தை உறிஞ்ச விட்டாயே
(நோயற்ற)

வீதிகளில் பறந்து திரியும் ஈயும் கொசுவும் - பல
நோயாளிகள் உடம்பிலுள்ள இரத்தத்தை உறிஞ்சும் நீ
உண்ணுகின்ற உணவினிலே உட்கார்ந்து இருந்தே உன்
உடம்பில் பல கேடுகளை உண்டு பண்ணுமே.
(நோயற்ற)

**எஸ். ராஜேஸ்வரி**
பத்தாம் வகுப்பு, பாத்திமா கான்வென்ட்
நிர்மலா ஆ/ப.ரி. கோடம்பாக்கம்.

## 5-ம் பக்க புதிருக்கான விடை

| | | |
|---|---|---|
| 2 | 9 | 4 |
| 7 | 5 | 3 |
| 6 | 1 | 8 |

## முயற்சி!

முயற்சியின்றி உலகம் இல்லை
முயற்சி செய்தால் நம்மால்
எதையும் சாதிக்க முடியும்.
முயற்சி உங்களின் மகிழ்ச்சி.
முயற்சியே உங்கள் வாழ்க்கை.
வெற்றியின் முதல்படி முயற்சி.
- சமூகப் பார்வைக் குழு

## 35-ம் பக்க விடுகதைகளுக்கான விடைகள்

1. கழுதை
2. மேளம்
3. அகப்பை (அ) கரண்டி
4. மிளகாய்
5. பட்டம்
6. புறா
7. கயிறு கட்டில்
8. ரேடியோ
9. புகை
10. மூக்கு
11. தும்மல்
12. பேனா
13. பிணம்
14. உள்ளங்கை, ரேகை
15. நூல்கட்டு
16. தலையணை
17. ஊசி, நூல்







முன் அட்டையில் : திருச்சி மணிகண்டம் குழந்தைகள் பாராளுமன்றம்

தனிச்சுற்றுக்கு மட்டும்

பஞ்சநாயக்கன்பட்டி குழந்தைகள்பாராளுமன்றம்



விழுப்புரம் மாவட்டம், மைக்கேல்புரம் குழந்தைகள் பாராளுமன்றம்



Published by ARUWYE. Mazzarello Convent, United India Colony, 1/2, 3rd Main Road, 5th Cross Street, PB530, Kodambakkam, Chennai - 600 024. Ph. 044-24730815